தென் இந்தியா க்ஷேத்ரங்கள்

பி. வி. ஜகதீச அய்யர் இயற்றியது.



3

திருவானைக்காவல்.
திருச்சிராப்பள்ளி.
உய்யக்கொண்டான் திருமலை.

Copyright Registered.

சில அபிப்பிராயங்கள்.

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகமானது ஜீவகளை நிரம்பிய அநேக திருக்கோயில்களால் அலங்கரிக்கப்பட்டிருப்பது உலகப் பிரஸித்தம். இதில் சில க்ஷேத்திரங்கள் மிகவும் தொன்மை வாய்ந்தன. பல சான்றுகளாலும் ஆராயும் அறிவுடையோர்களாலும் இத்துணை தொன்மையது என்று வரையறுக்க வொண்ணாத அத்துணை பழமை வாய்ந்த சில புண்ணிய க்ஷேத்திரங்களுள் "பெரியகோவில்" என்றும் "பூலோகவைகுந்தம்" என்றும் வெகுவாகக்கொண்டாடப்படும் ஸ்ரீரங்கம், "கோயில்" என்றும "பூலோககைலாஸம்" என்றும் சொல்லப்படும் சிதம்பரக்ஷேத்திரம், திருப்பதி, திருமாலிருஞ்சோலை முதலிய சில க்ஷேத்திரங்கள் முக்கியமானவை. இவைகளில் பல ஐதிஹ்யங்கள் உண்டு. ரஹஸ்யங்களாகப் போற்றப்பட்டுப் பெரியோர்களால் பூஜிக்கப்பட்ட ஸ்தலங்களுமாம். பிரஸித்தியான சைவ வைஷ்ணவ ஸமயாசார்யர்களான ஆழ்வார் ஆசார்யர்களாலும் நாயன்மார்களாலும் மங்களாசாஸனம் பண்ணிப்பாடப்பட்ட ஸ்தலங்களும், மூர்த்திகளும், தீர்த்தங்களும் இன்னும் அதி விசேஷமாகக் கருதப்படுகின்றன. இவைகளின் வரலாறுகள் "குருபரம்பரா பிரபாவம்", "கோயிலொழுகு", சிலா சாஸனங்கள் முதலிய சில அபூர்வ கிரந்தங்களிலும் கல்வெட்டுகளிலும் காணப்படுவது ஸாமாந்ய ஜனங்களுக்குக் கிடைப்பதில்லை. க்ஷேத்திரங்களுடைய விசேஷங்களையும் பெருமைகளையும் தெரிந்துகொள்ளாமலே நம் நாட்டார் பெரும்பாலோரும் மூடபக்தி பண்ணுகின்றனர். இந்த க்ஷேத்திரங்களுடைய அமைப்புகளையும், ஆகாரங்களையும், விசேஷங்களையும், சரித்திரங்களையும், ஐதிஹ்யங்களையும் பிறபல நுணுக்கங்களையும் உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் வெகு தெளிவான சித்ர (போடோ) படங்களுடன் எழுதி வெளியிட முன்வந்த ஸ்ரீரங்கம் ஸ்ரீவாணி விலாஸ ஸிண்டிகேட்டார்களுக்கு தமிழுலகம் என்ஞான்றும் கடமைப்பட்டதாயிருக்கும். சென்ற 21 ஆண்டுகளாக ஸ்ரீமான் T. K. பாலசுப்ரமண்ய ஐயரால் நிறுவி நடத்தப்படும் ஸ்ரீரெங்கம் ஸ்ரீவாணீ விலாஸ அச்சுக்கூடம் தமிழ் நாட்டில் மிகவும் கியாதி வாய்ந்தது. இவ்வச்சாலய வெளியீடுகள் எப்பொழுதும் உயர்ந்தமாதிரியானதாகவேயிருக்கும். தற்பொழுது நமது பார்வைக்கு வந்திருக்கும் ஸ்ரீரங்கம், சிதம்பரம் என்ற முதல் இரண்டு வெளியீடுகளும் கண்ணுக்கினிய படங்கள் நிறைந்த அதி உபயோகமான புத்தகங்களாயிருக்கின்றன. இவைகளுடைய விலையோ வெகு சொற்பமாயிருப்பது நமக்கு ஆச்சர்யமாகவேயிருக்கிறது. இன்னும் பல க்ஷேத்திரங்களையும் மொத்தம் 24 சஞ்சிகைகளில் வெளியிடுவதாகக் கோஷியுள்ளார்கள். தென்னாட்டிலுள்ள திவ்ய க்ஷேத்திரங்களைப்பற்றி சென்னைச் சிலாசாஸன இலாகா உத்தியோகஸ்தரான ஸ்ரீமான் பி. வி. ஜகதீச ஐயர் ஆங்கிலத்தில் ஓர் சிறந்த நூல் எழுதியிருக்கிறார். அவர் தமிழிலும் பல நூல்கள் எழுதியுள்ளார். அவருடைய அரிய உதவியைக்கொண்டு இவைகள் வெளிவருகின்றன என்பதைக் கேட்பின் நேயர்கள் இவ்வெளியீடுகளின் அருமை பெருமையை கணிசித்தறிவர். ஒவ்வொரு தமிழன்பரும், ஸ்தல மான்மியப்பிரியரும், ஆராய்ச்சியாளரும் இவைகளை வரவழைத்து பயன்பெறுவார்களாக. ஸ்ரீரெங்கநாதரையும் கோயில் விமானங்களையும், கோபுரங்களையும் உத்ஸவங்கள் கண்டருளப் பண்ணுவதையும் பிறக்ஷேத்ரவிசேஷங்களையும் முதல் ஸஞ்சிகையிலும் ஸ்ரீநடராஜப்



திருவானைக்காவல் ஸ்வாமிகோவில் விமானமும் ஜம்பு விருக்ஷமும்.

திருவானைக்காவல்.

(ஜம்புகேசுவரம்)

இந்த ஸ்தலம் பஞ்ச பூத ஸ்தலங்களில் ஒன்றான அப்பு ஸ்தலமெனக் கீர்த்தி வாய்ந்தது. "திருவானைக்காவல்" என்று இது தமிழில் வழங்குகிறது. இது திருச்சிராப்பள்ளிக்கு வடக்கில் இரண்டு மைல் தூரத்தில் காவேரிநதிக்கும் கொள்ளிடத்திற்கும் இடையிலுள்ள அழகு வாய்ந்ததும் மிகச் செழிப்புள்ளதுமான ஒரு தீவில் அமைந்துள்ளது. இதற்கு ஞானக்ஷேத்திரமென்றும் பெயருண்டு. இவ்விடத்தில் ஒன்பது முக்கிய தீர்த்தங்களுண்டு. அவைகளில் தைமாதம் பூர்ணிமையில் ஸ்நானம் செய்தால் விசேஷ பலன்களை அடையலாம். இது ஸ்தலம், தீர்த்தம், மூர்த்தி மூன்றிலும் விசேஷ மஹிமை யுடையது. பார்வதிதேவியே தீர்த்தத்தைத் திரட்டி லிங்கமாக பகவானைப் பூஜித்து அவரது உபதேசம் பெற்ற இடம்.

அப்புலிங்கம்.

இங்குள்ள அப்புலிங்க மூர்த்தி இறைக்க இறைக்க வற்றாத ஜலத்தின் மத்தியில் விளங்குகிறார். இவ்வூருகது "ஜம்புகேசுவரம்" என்ற பெயா வந்ததற்குக் காரணம் ஒருக்கால் இங்கு நாகமரம் (ஜம்புமரம்) அடர்ந்த காடுகள் சூழ்ந்திருந்ததே யெனக் கூறுகிறார்கள்.



திருவானைக்காவல் கோவிலுக்குள் நுழையும் முதல் கோபுரம். இதைச் சேர்ந்தாப் போலிருக்கும் மதில் தான் நீறிட்டான் மதிள். இதற்கு வெளியிலிருக்கும் வீதிதான், ஐந்தாவதான விபூதி பிராகாரம்.

கோயில் கட்டிடம்.

இப்பெரியகோயில் சுமார் 2400 அடி நீளமும் சுமார் 1500 அடி அகலமுமுள்ளது. பஞ்சப்பிராகாரங்களையுடையது. இதில் சில்ப வேலையில் திறமையுடைய கல் தூண்க

ளுள்ள ஆயிரக்கால் மண்டபமுண்டு. அம்மன் கோயில் முன்னுள்ள மண்டபத்தூண்களிலும் சில விசேஷ பிம்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. ஒன்று, இவ்விடத்து ஸ்தலபுராண ரீதியாய் எற்பட்டுள்ளபடி அம்பாள் மூல லிங்கத்தை பூஜை செய்கிற மாதிரியாயுள்ளது; மற்றொன்றில் "எகபாததிருமூர்த்தி" பிம்பமுள்ளது. இதில் ஒரு பாதத்தில் பிரம்மா, விஷ்ணு, சிவன் இப மூன்று சுவாமிகளும் தங்கள் தங்களது வாகனங்களாகிய அன்னம், கருடன், விருஷபம இவைகளுடன் விளங்கி வருகின்றனர்.



இங்கு அம்மன் கோவில் கிழக்கு முகமாகவும் ஸ்வாமி கோவில் மேற்கு முகமாகவும் இருக்கிறது.

அகிலாண்டேசுவரி அம்மன் கோவில் விமானம்.

இக்கோயிலுக்கு வெளியிலுள்ள ராஜராஜேசுவரர் கோயிலில் வெகு நேர்த்தியாய் அமைக்கப்பட்டுள்ள லிங்கம் ஐந்துமுகங்களுடன் இருந்து வருகிறது. இவ்வைந்து முகங்களாகிய ஸத்யோஜாதம், வாமதேவம், தத்புருஷம், அகோரம், ஈசானம் ஐந்தும் முறையே நான்கு நாலுபுரத்திலும் ஐந்தாவது மேல்புரமாய் ஆகாயத்தை நோக்கியும் அமைக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு விசேஷ வேலைப்பாடுள்ள லிங்கம்.

இவ்வூர் சமீபத்திலுள்ள திருவாசி என்னுமிடத்தில் நடராஜர் விக்ரஹம் ஜடாமுடியுடன் விளங்குவதுமன்னியில், இம்மூர்த்தி முயலகன் மீது நில்லாமல் அவ்வசுரன் சமீபத்தில் நின்று கொண்டிருக்கிற மாதிரியாக அபூர்வமான விதமாய் அமைக்கப்பட்டுள்ளது.

மற்றைய கோவில்கள்.

இத்திருவாசி எனப்படும் ஸ்தலத்திற்கு திருப்பாச்சிலாச்சிராமம் எனப்பெயர் மு



திருவானைக்காவல் தேர் உத்ஸவம்.

ன்னர் வழங்கி வந்தது. இது திருவானைக்காவுக்கு வடமேற்கில் 3 மைல் தூரத்திலுள்ளது. இவ்விடத்தில் ஸுந்தரமூர்த்தி நாயனர் பொன் வேண்ட சுவாமி முதலில் கொடாமலிருக்க 'இவரலா தில்லையோ பிரானர்" என்று பாடி பொன்னைப் பெற்ற பெருமை வாய்ந்த இடம். இவ்விடம் நடராஜமூர்த்தி பாதத்தின் கீழ் முயலகனிராததற்கு ஒரு கதையுளது. அக்காலத்திய கொல்லிமழவன் என்ற மன்னவனது புத்திரியாருக்கு நேர்ந்த முயலக

நோயை சம்பந்தர் பதிகம்பாடித் தீர்த்தருளினார். இந்த நோய்க்கு மூலமான முயலகன் நடராஜப்பெருமானது திருவடியின் கீழ்க் கிடத்தலால் சம்பந்தர் பாடலுக்கு விஷயமான அவனது உருவம் மறைந்து போயிற்று. முயலக நோய் பெண்ணை விட்டு நீங்கியது போல அந்த நோய்க்கு அதிஷ்டானமாகிய முயலகன் நடராஜர் திருவடியை விட்டு விலகிப் போயினன் எனவே, அவ்வூர்க் கோயிலிலிருந்த நடராஜர் திருவடியின் கீழ்க் கிடந்த முயல

திருவானைக்காவலில் ஆயிரக்கால் மண்டபத்துக்கு முன்னிருக்கும் ஸர்வதீர்த்த தெப்பக்குளம்.

கன் திடீரென்று காணாமற் போயினான். அது கண்ட அரசன் முதலானோர் அதிசயமடைந்து, காரணம் அறியாதவர்களாய்ப் புதிய நடராஜ முகூர்த்தம் ஒன்று முயலகனோடு அமைப்பதற்கு முயன்றார்கள். சிற்பிகள் நடராஜ வடிவத்தை முயலகனுடன் முதலில் கருக்கட்டி அமைத்துக் கொண்டு பஞ்சலோகங்களை ஒன்று சேர்த்து உருக்கி வார்த்

தார்கள். பின்னர் குகையை உடைத்துப் பார்க்கையில் முயலகன் இல்லை! நடராஜர் மட்டும் விளங்கினர். இந்த அதிசயத்தைக் கண்டு மறுபடியும் வார்த்தார்கள். அப்பொழுதும் முயலக னின்றி அமைந்தது! திரும்பவும் ஒரு முறை வார்ததார்கள். முன்போலக் கருக்கட்டி, உலையிலே லோகத்தை ஏற்றி உருக்கிக் கொண்டிருந்த சிற்பி மிகவும் கவலையுடனும் அச்சத்துடனும் இறக்க வேண்டிய சமயத்தை எதிர் நோக்கியிருந்தான்.

ஜம்பு விருக்ஷம்.

அப்பொழுது ஒரு அசந்தர்ப்பத்தால் சிறிது வெளியே செல்ல நேர்ந்தது. அச்சமயத்தில் நடராஜப்பெருமான் அந்தச் சிற்பியைபபோல உள்ளே சென்று உலையிலிருந்த சரக்கை யெடுத்துக் குகையில் வார்த்தனர். உடனே வெளியே சென்றிருந்த சிற்பி வந்து பார்க்க சரக்கைக் குகையில் ஊற்றியிருக்கக்கண்டு, 'யார் இது செய்தவர்' என்று கோபத்துடன் அங்கிருந்தவர்களைக் கேட்டான். அவர்கள் அதிசயத்துடன் சிற்பியைப் பார்த்து 'முன் ஒரு சிற்பி இங்கே வந்து இந்தக் காரியஞ் செய்தார். வெளியே போயிருந்த நீர்தானென்று நாங்கள் கருதியிருந்தோம். நீர் திரும்பி வந்ததும் இப்பொழுது அவரை இங்கே காணோம்' என்று சொன்னார்கள். இதனைக் கேட்ட சிற்பி ஒன்றுந் தோன்றாமல் குகையை உடைத்துப் பார்ப்போ மென்று யாவரும் பார்க்கும்படி சோதித்தான். அப்பொழுது முயலகன் இன்றியே சடையினைக் கிரீடம் போற் சுற்றிக்கொண்டு, (முயலகன் பிடித்திருந்த) சர்ப்பத்தின் மேல் நடனம் புரியும் திருக்கோலத்துடன் எம்பெருமான் தோன்றினார்! அவ்வத்

புதக் காட்சியை அரசன் முதலாயினோர் கண்டு அதன் உண்மை தெரியாமல் கலங்கித்திருவருளைப் போற்றி நின்றார்கள். அப்பொழுது எம்பெருமான் அசரீரியாக, "அரசனே, சம்பந்தன் உனது வேண்டுகோளால் உனது மகளுக்கு ஏற்பட்டிருந்த முயலக நோயைத் தீர்த்தபொழுது அந்த நோய்க்கு அதிஷ்டானமாகிய எனது காலின் கீழ் இருந்த முயல



கிழக்கு கோபுரமும் அதற்குள்ளிருக்கும் ஜம்புதீர்த்தக் குளமும் தோப்பும்.

கனை மறைந்திடச் செய்தேன். முயலகன் இப்பொழுது எனது காலடியில் இல்லை. அவன் முக்தி யடைந்து விட்டான். ஆதலால் இந்தத் தலத்தில் முயலகன் உருவம் மறைந்து விட்டது. நூதன விக்ரஹம் அமைக்க வேண்டி நீயும் மற்றவரும் பலமுறை முயன்றும், உங்கள் விருப்பம் நிறைவேறுவண்ணம் நானே சிற்பியாக வந்து ஸம்பந்தன் புகழை

மைசூர் கர்த்தர் மண்டபம், திருவானைக்காவல். ஸமீபத்தில நடந்த திருப்பணி வேலையில் இம்மண்டபத்தை பிரித்துவிட்டார்கள்.

நிறுத்தினேன்" என்று திருவாய்மலர்ந்தருளினர். இவ்வத்புத வாக்கைக் கேட்ட மன்னனும் சிற்பியும் மற்றவர்களும் பெரு மகிழ்ச்சி யடைந்தார்கள். இப்பொழுதும் அந்த க்ஷேத்திரத்தில் நடராஜப் பெருமான் முயலகனின்றியே எழுந்தருளியிருக்கிறார். "முயலக தீர்த்தம்" என்று ஒரு தீர்த்தம் இருக்கிறது. அதில் நீராடினல், நோய்களும் பேய்களும் நீங்கிச் சுகவாழ்வுண்டாம்.

ஜம்பு விருக்ஷத்தினடியில் லிங்கம் ஏற்பட்ட காரணம்.

ஒரு ஸமயம் ஒரு ரிஷி இங்கிருந்து ஒரு நாகப்பழத்தைக் கைலாஸ பர்வதத்திற்குக்கொண்டு சென்று அங்கு ஈசுவரனுக்கு அதை அர்ப்பணம் செய்த பிறகு புசிக்க, அக்கனி அவரது வயிற்றில் முளைத்து மரமாகித் தலைவழியாகக் கிளப்பிற்றாம். இதனல் ஆச்சரியமடைந்த அந்த ரிஷி தான் நாகப்பழம் கொண்டுவந்த ஜம்புகேசுவரத்தில் அம்மரத்தின் கீழ் கடவுள் எழுந்தருளி யிருக்குமாறு வேண்டிக்கொண்டனராம். இதனல் இந்த ஸ்தலத்திற்கு மஹிமை ஏற்பட்டுளது. இப்பொழுதும் இம்மரம் ஸ்தலவிருக்ஷமாக கர்ப்பகிருஹத்தின் வெளியில் இருந்து வருகிறது.

அம்மன் பூஜித்தது.

இங்குள்ள அம்மனுக்கு "அகிலாண்டேசுவரி" என்று பெயர். ஒரு ஸமயம் கைலாஸத்திலிருந்து பூலோகம் வந்து ஈசுவரனிடத்தில் ஞானேபதேசம் பெற ஈசுவரி இவ்விடத்திலுள்ள மூர்த்தியைப் பூஜித்ததாக ஐதிஹ்யம். இந்த மாதிரி சிலை அம்பாள் ஸந்நிதியின்

அகிலாண்டேச்வரி அம்மன ஜம்புலிங்கத்தை பூஜை செய்தல். இது கோவிலில் சிலாரூபமாக இருக்கிறது.

முன்னுள்ள மண்டபத்திலுள்ள கல் தூணில் செதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் உச்சிகாலப் பூஜை செய்யக் குருக்கள் ஸ்திரீ மாதிரியாக ஆடையுடுத்து மூலலிங்கத்தைப் பூஜிப்பது வழக்கம்.

இவ்விடத்திலுள்ள அம்மன் வெகு உக்ரகலையுடனிருந்து பிரதிதினமும் காலையில் கோயில் கதவைத் திறப்பவர்களை பாதித்ததாகத் தெரியவர, ஆதி சங்காராசாரிய சுவாமிகள் அம்மன் காதுகளில் ஸ்ரீசக்ரயந்திரத்தைத் தாடங்கமாகச் சாத்தி அந்த உக்ர கலையை சாந்தப் படுத்தியதுமன்னியில் அம்மன் எதிரில் விநாயகரைப் பிரதிஷ்டை செய்தால் அந்த உக்ர வீக்ஷண்யம் விநாயகரிடம் செல்லுமென்ற காரணததால் பிறகு அவ்வாறு உக்ரத்தைக் காட்டமாட்டாளென்று விநாயகர் ஸந்நிதியைப் பிரதிஷ்டை செய்தார். இப்பொழுதும் இந்த ஸந்நிதி அம்மனுக்கு எதிரில் இருந்து வருகிறது.

யானை, சிலந்தி, பூஜித்தது.

இங்குள்ள மூர்த்தியை அருகில் வடமேற்குத் திசையில் பத்மகுண்டலி என்னும் தீர்த்தத்தையுடைய சுவேதகிரி மலையின் சமீபத்திலுள்ள காட்டில் வசித்த யானை ஒன்று துதிக்கையில் ஜலம் கொண்டு வந்து அபிஷேகம் செய்து பூஜித்து வரச் சிலந்தி ஒன்று லிங்கத்தின் மீது மரத்திலிருந்து இலைகள் விழாது தடுக்க வலை கட்டித் தனது பக்தியைக் காட்டிற்றும்.

ஒரு நாள் யானை சிலந்தி கட்டியிருந்த வலையை அசுசிதமென்று கருதிக் கலைக்கச் சிலந்தி கோபங்கொண்டு அதன் துதிக்கைக்குள் சென்று அதைக் கடித்துச் சாகும்படி செய்ய அது சாகும்தருணத்தில் துதிக்கையைக் கீழே அடித்துச் சிலந்தியைக் கொன்று விட்டு இறந்ததாம். இவ்விரு பிராணிகளின் பக்தியால் மகிழ்ச்சி யடைந்த சிவபிரான் அவ்விரண்டிற்கும் இங்கு முக்தி அளித்தனர் என்பது புராணக்கதை. இறந்த சிலந்தி சோழ அரசர்கள் ஒருவருக்குக் குழந்தையாகப் பிறந்ததாகவும் அக்குழந்தைக்குக் கோச் செங்கண்ணனெனப் பெயர் ஏற்பட்டதாகவும் கூறுகிறார்கள்.

"சிலந்தியு மானைக்காவிற் திருநிழற் பந்தர் செய்து
உலந்த வணிறந்த போதே கோச் செங்கணானுமாகக்
கலந்த நீர்க்காவிரிசூழ் சோணாட்டுச்சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே."

அரசன் மாலை ஆண்டவனுக்கு அர்ப்பணமானது.

இவ்வூரின் ஸமீபத்திலுள்ள உறையூரில் அரசு செலுத்திய ஒரு சோழராஜன் தான் காவேரியில் பக்தியுடன் ஸ்நானம் செய்கையில் அவனது பத்னியின் கழுத்தில் தரித்திருந்த

முத்துஹாரம் நழுவிவிட்டது. அரசன் கவலைகொள்ளாது ஈசனுக்கு அர்ப்பணமென்று சொல்லி ஸ்நானம் செய்து விட்டுக் கோயிலுக்கு சுவாமி தரிசனம் செய்யப்போனதும் மூலலிங்கத்திற்கு அபிஷேகம் செய்யும் ஸமயம் அந்த ஹாரம் ஜலத்திலிருந்து சுவாமியின் பேரில் விழுந்த பெருமையைக்கண்டான். இந்த விஷயத்தை சுந்தரர் பாடியிருக்கிறார்.

ஸ்வாமி கோயிலுக்குப் பின்பக்க முள்ள சண்டிகேசுவரர்கோயில்.

நீறிட்டான் மதிள்

கோச்செங்கட் சோழநாயனாராலே வெகு பக்தியுடன் கட்டப்பட்ட இக்கோயிலின் வெளிமதிள் கட்டுகையில் ஈசுவரனே ஒரு சித்தர் வடிவமாக வந்து வேலை செய்யும் ஆட்களுக்குக் கூலியாக விபூதிப் பொட்டலத்தை அன்றன்று மாலையில் கொடுத்தனுப்ப அவர்கள் வீடு சென்று அதனை அவிழ்த்ததும் அவரவர்கள் செய்த வேலைக்குத் தக்க கூலி

அதில் அடங்கியிருக்கும் பெருமையைக் கண்டார்களாம்! அதுபற்றியே அந்த வெளி மதிலுக்குத் "திருநீற்றுமதில்" என்றும் "நீறிட்டான் மதில்" என்றும் பெயர் ஏற்பட்டதாம். இதைப் பிரதக்ஷிணம் செய்வதால் மகப்பேறு, ஜயம், செல்வம், இன்பம் இவைகளை அடையலாமென்பது கொள்கை.



அம்மன் கோவிலுக்கு எதிராக உள்ள த்வஜஸ்தம்பமும், ஆதி ஸ்ரீசங்கராசாரியரால்

பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்னேசுவரர் கோவிலும்.

ஸ்ரீராமர் பூஜை செய்தது.

ஸ்ரீராமர் இலங்கையில் இராவணாதிகளை ஸம்ஹாரம் செய்து ஸீதாதேவியுடன் திரும்புகையில் இராவணனைக் கொன்ற பாபம் நீங்க இராமேசுவரத்தில் லிங்கப்பிரதிஷ்டை செய்தும் பின்னர் கும்பகர்ணனுடைய சாயை தன்னை பாதிக்க இவ்விடம் வந்ததும் அந்த

பிதி நீங்கப்பெற்றனர். அதைக்கண்டு ஸந்தோஷமடைந்த ஸ்ரீராமர் பின்னரும் இப்புண்ணிய க்ஷேத்திரத்தை விட்டு நீங்கினதும் அந்த உபாதை வாரவண்ணம் இவ்விடம் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்ய உத்தேசம்கொண்டு அங்கதனைக்கொண்டு நர்மதாதீரத்திலிருந்து ஒரு பாணலிங்கம் தருவித்து அதைக் கோயிலில் மேல்புறமுள்ள குளத்தின் கரையில் பிரதிஷ்டை செய்தார்.

பராசரர் பூஜித்தது.

ஹரிச்சந்திர மஹாராஜா சத்தியம் தவறாமையினால் வஸிஷ்டருக்கும் விசுவாமித்திரருக்கும் விரோதமுண்டாகி அதன் காரணமாக விசுவாமித்திரரால் ஏவப்பட்ட பூதம் வசிஷ்டரது குமாரன் சக்தியை அகாரணமாய்க் கொன்று விட்டது. அக்காலத்தில் சக்தியின் மனைவி கர்ப்பவதியாயிருந்தவள் பாராசரரைப் பெற்றனள். இப்பாராசரர் தமது பிதா அகாலமரணத்தை அடைந்ததன் நிமித்தம் இந்த ஸ்தலம் வந்து பூஜித்துப் பிதாவினது பிரேதத்திற்கு தர்ப்பணாதிகளைச் செய்து திருப்தி செய்வித்து தமது பிதாவைக் கொன்ற அரக்கர்களை ஒழிக்க எண்ணிக்கோயிலின் வடகிழக்கு எல்லையில் ஒரு குண்டத்தை இயற்றி ஆபிசாரஹோமத்தைச் செய்தனர். பின்னர் நிருருதியின் வேண்டுகோளினால் அதை நிறுத்தி மூலலிங்கத்தைப் பூஜித்து மஹிமை பெற்றனர்.

கௌதமர் பூஜித்தது.

கௌதமர் தமது தர்மபத்நியாகிய அஹல்யையை சபித்தபின்னர் அவளைப் பிரிந்த கவலையால் இவ்விடம் வந்து ஈச்வரனைப் பூஜித்துவந்தனர். இவ்விதம் செய்து வருகையில் தமது பத்னி சாபம் ஸ்ரீராமரால் நீங்கப் பெற்று அவள் சீக்கிரம் அவரை இவ்விடம் வந்து அடைவள் என்று அசரீரியால் தெரிந்து கொண்டனர். இவ்விதமே அஹல்யை தமது சாபம் நீங்கினதும் இவ்விடம்வந்து அவரை அடையப் பின்னர் இருவரும் தமது இருப்பிடம் சென்றனர்கள் என்பதாக இவ்வூர் ஸ்தலபுராணம்.

குபேரன் புஷ்பக விமானத்தைத் திரும்பப் பெற்றது.

இராவணனால் தமது புஷ்பகவிமானம் பிடுங்கிக்கொண்டு போகப்பட்டதன் நிமித்தம் கவலை கொண்ட குபேரன் இவ்விடம் வந்து கோயிலில் தமது பெயரால் ஒரு லிங்கத்தை ஸ்தாபித்து அதைப் பூஜித்து வந்ததின் காரணமாக இராவணன் வதமானதும் ஸ்ரீராமரால் அவர் அயோத்தி வந்ததும் இந்த விமானம் இவனிடம் வரப்பெற்று ஸந்தோஷமடைந்து தமது இருப்பிடம் சென்றனன்.

ஏகபாத திருமூர்த்தி ஜம்புகேச்வரம்.

கோச்செங்கண்ணன்.

சிதம்பர க்ஷேத்திரத்தில் சுபதேவன் என்னும் சோழமஹாராஜன் தனது பத்னியாகிய

கமலவதியுடன் வாழ்ந்து வரும் நாளில் சமலவதி கர்ப்ப முற்றனள். மேலே குறித்த சிலந்தி இறந்ததும் இவள் வயிற்றில் கருவுண்டாயிற்றாம். பிரசவ வலி ஏற்பட்டதும் அரண்மனை ஜோசியர்கள் ஒரு நாழிகை கழித்துப் பிரசவமானால் அக்குழந்தை வெகு கியாதியுடன் அரசாளுமென்று சொல்ல அவ்வாறே தனக்குப் புத்திரன் பிறக்கவேண்டித் தன்னைத் தலைகீழாகக் கட்டிவைக்கும்படி அரசி வேண்டிக்கொண்டாள். இதன் நிமித்தம் பிரசவம் தாமதித்ததின் காரணமாகக் குழந்தை பிறந்ததும் கண்கள் சிவந்திருக்க அவருக்குக் "கோச்செங்கண்ணன்" என்று பெயரிட்டார்கள். அவர் வெகு கியாதியுடன் அரசாண்டு பல கோயில்களைக் கட்டி வைத்து அதனால் நாயன்மார் திருக்கூட்டத்தில் சேர்ந்து பெருமைபெற்றார்.

சிலா சாஸனம்.

இங்குள்ள கோவிலின் மூன்றாவது பிராகாரத்திய வடக்குச் சுவரில் வீரஸோமேசுர தேவன் என்ற அரசன் விக்கிரமபுரி என்ற கண்ணனூரில் விக்கிரக ஸ்தாபனம் செய்ததும் ஜம்புகேசுரத்தில் தனது மனைவி, தகப்பனார், பாட்டனார், பாட்டி இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி நானகு சிலா விக்கிரக ஸ்தாபனங்கள் செய்ததும் வரைந்து வைக்கப்பட்டிருக்கக் காணலாம். இரண்டாவது பிராகாரத்தின் மேற்குச்சுவரில் பாண்டிய அரசன் குலசேகரதேவன் காலத்தில் சிலந்தி சோழராஜனாக மாறியதால் காட்டப்பட்ட கடவுளது மஹிமைக்கு அறிகுறியாக ஏற்படுத்தப்பட்ட வீதியைப் பற்றிய விவரம் கூறப்பட்டுளது.

முதலாவது குலோத்துங்கசோழராஜனது காலத்தில் வில்லவராயன் என்பவர் இக்கோயிலில் விருஷபவாகன மூர்த்தியையும் அம்மனையும் ஏற்படுத்தியதுமன்னியில் அம்மூர்த்திகளுக்குப் பூஜை நிவேத்தியம் ஸரிவர நடந்துவர பூமியும் வாங்கி ஏற்பாடு செய்வித்த விவரம் சிலாலிகிதத்தில் அடியில் கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இத்திருவானைக்காவில் வெண்ணாவல் மரத்தடியில் மூலத்தானம் ஆதிகாலம் தொட்டு இருந்ததென்கிற விவரம் "தென் இந்தியா சாஸனங்கள்" 3-வது புஸ்தகம் 170 பக்கம் பதிப்பித்திருக்கும் சாஸனத்தால் வெளிவரும்:—

ஸ்வஸ்திஸ்ரீ புகழ் சூழ்ந்த புணரியகழ் சூழ்ந்த புவியில் பொங்கேமி யளவுந்தங்கேமி நடப்ப விளங்கு சயமகளை யிளங்கொப்பருவத்து சக்கரகோட்டத்து விக்கிரமத்தொழிலால் புதுமணம் புணர்ந்து மதவரை யீட்டம் வயிராகரத்து வாரி அயிர் முனைக் கொந்தளவரசர் தந்தளமிரிய வாளுறை கழித்து தோள்வலி காட்டிப் போர்ப்பரி நடாத்திக் கீர்த்தியை நிறுத்தி வடதிசை வாகை சூடித் தெந்திசைத் தேமருகமலப்பூமகள் பொதுமையும் பொந்நியாடை நன்நிலப்பாவையுந் தனிமையுந் தவிரப் புனிதத் திருமணி மகுடம் உரிமையிற் சூடித்தந்நடி யிரண்டுந் தடமுடியாகத் தொந்நில வேந்தர் சூட முந்நை மநுவாறு பெருக கலியாறு வறப்ப செங்கோல் திசை தொறுஞ் செல்ல வெண் குடை யிருநில வளாகம் எங்கணுந் தனது திருநிழல் விண்ணிலாத்திகழ் ஒரு தனி மேருவில் புலி விளையாட கடற்றீவாந்தரத்துப் பூபாலர் திறை விடு தந்த கலஞ் சொரி களிறு முறை நிற்ப விலங்கிய தென்னவந் கருந்தலை பருந்தலைத் திடத்தந் பொந்நகர்ப் புறத்திடைக் கிடப்பவிராள் பிற்குலப்பிறை

போல் நிற்பிழை எந்நுஞ் சொல்லெதிர் கொடிற்றல்லது தங்கை வில்லது கொடாவெழகுலத் தாசர் அளத்திலிட்ட களற்றின நீட்டமும் பட்டவெம்பரியும் விட்ட தந்மானமும் கூறிந வீரமும் கிடப்ப ஏறின மலைகளு முதுகு நெளிப்ப யழிந்த நதிகளுஞ் சுழன் றுடைந்தோட விழுஞ்சகடல்களுந் தலைவிரித்தலமாக் குடதிசைத் தந்நாளுகந்து தானும் தானையும் பந்நாளிட்ட பலபல முதுகும் பயந்தெதிர் மாறின ஜயப்பெருந்திருவும் பழியுகந்து குடுத்த புகழிந்செல்வியும் வாளாரொண்கண் மடஞையரீட்டமும் மீளாது குடுத்த வெங்கரி நிரையும் கங்கமண்டலமும் சிங்கணமெந்நும் பாணியிரண்டும் ஒரு விசைக் கைக்கொண்டீண்டிய புகழொடு பாண்டிமண்டலங்கொள்ளத் திருவுளத்தடைத்து வெள்ளவரு பரித்தாங்கமும் பொரு பரிக்கலங்களும் தந்திர வாரியு முடைத்தாய் வந்து வடகடல் தெங்கடல் படர்வது போலத்தந் பெருஞ்சேனையையேவிப் பஞ்சவர் ஐவரும் பொருத போர்களத்தஞ்சி வெருநெளித்தோடி அரணெநப்புக்க காடறத்துடைத்து நாட்டடிப்படுத்து மற்றவர் தம்மை வனசரர் திரியும் பொச்சை வெஞ்சுரமேற்றி கொற்ற விஜயஸ்தம்பந்திசை தொறு நிறுத்தி முத்திந் சலாபமும் முத்தமிட் பொதியிலு மத்தவெங்கரிபடு மய்யச சய்யமுங் கந்நியுங் கைக்கொண்டு புநிதத்தெந்நாட்டெல்லை காட்டிக் குடமலை நாட்டுள்ள சாவேறெல்லாந் தநிவிசும்பெற மாவெறிய தந்வளநினித் தலைவரைக் குறுகலர் குலையக் கொட்டாறுட்பட நெறிதொறும் நிலைகளிட்டருளித்திறல் கொள் வீரஸிம்ஹாஸனந் திரியவிட்டருளிப் பொங்கொளியாரமுந்திருப்புயத்தலங்களும் போல் வீரமுந்தியாகமும் விளங்கப்பார்தொழச் சிவநிடத் துமை யெநத்தியாகவல்லி உலகுடையாளிருப்ப அவளுடந் கங்கை வீற்றிருந்தந மங்கையர் திலதம் எழிசைவல்லபி ஏழுலகமுடையாள் வாழி மலர்ந்திநி திருப்ப ஊழியுந்திருமாலாகத்துப் பிரியாதெந்று திருமகளிருந்தென வீரஸிம்ஹாஸனத்து உலகுமுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோவிராஜகேஸரி வந்மரான திரிபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு ௪௰௭ ஆவது பாண்டிகுலாசநி வளநாட்டு மீகொழை தெவதாந ப்ரஹ்மதேயம் திருவானைக்காவில் திருவெண்ணாவல் கீழிநிதமர்ந்தருளிய ஸ்ரீராஜராஜ வனபதிக்கு மூலஸ்ராத்தீநாகிய அஞ்ஞூற்றவந் ஆதேயம் ஜயசிங்ககுல காலவள நாட்டு மீசெங்கிளி நாட்டு வளம்பகுடி அரயமகந் முனையந் அருமொழி தேவநான வில்லவாரயனுக்கு நாம் விற்றுக் குடுத்த நிலமாவது உடையார் திருவானைக்காவுடைய எம்பெருமாந் தேவதாநம் தெங்கரை ஊர்களில் பாண்டிகுலாசநி வளநாட்டு மீகோழை ஆளிகுடியில் இவனுக்கு விற்றுக்குடுத்த நிலத்துக் கிசைந்த கீழ் பார்க் கெல்லை பிள்ளைகொள்ளி வாய்க்காலுக்கு மேற்கும் தெந் பார்க் கெல்லை களத்தில் வடக்கில் கைய்வாய்க்காலுக்கு வடக்கும் மீபார்க்கெல்லை உத்தம சீலிச்சருப்பேதிமங்கலத்து தெந் பிடாகை புதுக்குடி எல்லைக்கு கிழக்கும் வட பார்க் கெல்லை தெந்நாற்றங்கரைப் பெருவழிக்கு தெற்கு ஆக இவ்விசைந்த பெருநாந் கெல்லையுள் பட்ட நிலம் சஞ

இந்நிலம் நாலே முக்காலும் இத் தேவர்க்கு யாண்டு நாற்பத் தேழாவது வரை பயிரிலி புந்செய்யாய்க் குட்டமு மண்ணுமிட்டுக் கிடந்தமை யிலந்நிலம் முனையந் அருமொழி தேவநான வில்லவாரயனுக்கு விற்றுக்குடுத்துக் கொள்வதாக எம்மிலிசைந்த விலைபொருள் அந்றுடு நற்காசு சபஉ

இக்காசு நாலே மாகாணியுங்கைக் கொண்டு திருவானைக்காவுடைய எம்பெருமாந் ஸ்ரீபண்டாரத்து ஒடுக்கி முனையந் அருமொழி தேவநாந வில்லவாரயனுக்கு விற்றுக்குடுத்து

இவங் உடையார் திருவானைக்காவுடைய எம்பெருமாங் கோயிலில் இடங்கை நாயகரெங்று எழுங்தருளுவித்த இஷபவாஹன தேவர்க்கும் நம்பிராட்டியார்க்கு திருமஞ்சநங்களுக்கு திருவமிர்து படிக்கு இரண்டு திருநாளிலும் இரண்டு நாள் திருவிழா எழுங்தருளுகைக்கு உள்ளிட்டு வேண்டும் நிமங்தங்களுக்கு இங்நில ௬௯ கல்லித்திருத்தி ஸ்ரீ பண்டாரத்து புங்செய் வரிசையால் வேலி ஒங்றுக்கு நெல் ஐங்கலமாக ராஜகேஸரி மரக்காலால் இங்நிலம் நாலே முக்காலுக்கும் அளப்பதாந நெல் உ௰௩ளவ௲ு

இங்நெல் இரு பத்து முக்கலநே இருதூணிக் குறுணியும் அளக்குமிடத்தில் கார் பாதி பசாநம் பாதி அளப்பதாகவும்

இதில் மிகுதி கொண்டு இவங் இடங்கை நாயகரெங்று எழுங்தருளுவித்த இஷபவாஹநதேவர்க்கும் நம்பிராட்டியார்க்கும் திருமஞ்சன படிகளுக்கும் திருவமுது படிக்கும் இரண்டு திருநாளிலும் இரண்டு நாளெழுங்தருளுகைக்கு உள்ளிட்டு வேண்டு நிமங்தங்களுக்கு நிமங்தஞ் செய்து குடுத்தோம்.

முனையன் அருமொழி தேவநான வில்லவராயநுக்கு திருவானைக்காவுடைய எம்பெருமாநுக்கு மூலஸ்தானமாகிய அனெவ்ஷஙங் உள்ளிட்ட கங்மிகளோம்.

இது பந்மாஹெஸ்வரரக்ஷை.

தேவாரப் பாடல்கள்.

ஸம்பந்தர் திருவாய்மலர்ந்தருளியது:—

இரண்டாம் திருமுறை.—பண்—இந்தளம்.

மழையார் மிடறு மழுவாளுடையாய், உழையார் கரவா வுமையாள் கணவா
விழவாரும் வெண்ணுவலின் மேவிய வெம், அழகாவெனுமாயிழை யாளவனே. 1

கொலையார் சரியின்னுரி மூடியனே, மலையார் சிலையா வளைவித்தவனே
விலையா லெனையாளும் வெண்ணுவலுளாய், நிலையாவருளா யெனு நேரிழையே. 2

காலாலுயிர் காலனை வீடு செய்தாய், பாலோடு நெய்யாடிய பால்வண்ணனே
வேலாடு கையா யெம் வெண்ணுவலுளாய், ஆலார் நிழலா யெனுமாயிழையே. 3

சுறவக் கொடி கொண்டவனீறு துவாய், உற நெற்றி விழித்த வெமுத்தமனே
விறன் மிக்க கரிக்கருள் செய்தவனே, அறமிக்கது வென்னுமெனுயிழையே. 4

செங்கட் பெயர் கொண்டவன் செம்பியர் கோன், அங்கட் கருணை பெரிதாயவனே
வெங்கண் விடையாயெம் வெண்ணுவலுளாய், அங்கத்தயர்வாயினளாயிழையே. 5

குன்றேயமர்வாய் கொலையார் புலியின், தன்றோலுடையாய் சடையாய் பிறையாய்
வென்றாய் புரமூன்றை வெண்ணுவலுளே, நின்றாயருளாயெனு நேரிழையே. 6

மலையன்றெடுத்த வரக்கன் முடிதோள், தொலையவ் விரலாலூன்றிய தூமழுவா
விலையில்லெனையாளும் வெண்ணுவலுளாய், அலசா மனல்கா யெனுமாயிழையே. 7

திருவார் தரு நாரணனன் முகனும், மருவா வொருவா வழலாய் நிமிர்ந்தாய்
விரையாரும் வெண்ணுவலுண் மேவிய வெம், அரவா வெனு மாயிழையாளவனே. 8

புத்தர் பலரோடு மண் பொய்த்தவர்கள், ஒத்தவ்வுரை சொல்லிவை யோரகிலார்
மெய்த் தேவர் வணங்கும் வெண்ணாவலுளாய், அத்தாவருளாயெனு மாயிழையே. 9

வெண்ணாவலமர்ந்துறை வேதியனைக், கண்ணார் கமழ் காழியர் தந்தலைவன்
பண்ணோடிவை பாடிய பத்தும் வல்லார், விண்ணோரவ ரேத்தவிரும்புவரே. 10

மூன்றாம்திருமுறை—திருவிராகம்—பண்—கௌசிகம்.

வானைக்காவல் வெண்மதிமல் குபுல்குவார் சடைத்
தேனைக்காவலின் மொழித் தேவிபாகமாயினான்
ஆனைக்காவிலண்ணலைய பயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவர்க்கேது மேதமில்லையே. 1

சேறுபட்ட தண்வயற் சென்று சென்று சேணுலா
வாறுபட்ட நுண்டுறை யானைக்காவிலண்ணலார்
நீறு பட்ட மேனியார் நிகரில் பாத மேத்துவார்
வேறு பட்ட சிந்தையார் விண்ணிலென்ன வல்லரே. 2

தாரமாய மாதராடா னோர் பாக மாயினான்
ஈரமாய புன் சடை யேற்ற திங்கள் சூடினான்
ஆரமாய மார்புடை யானைக்காவிலண்ணலை
வாரமாய் வணங்குவார் வல் வினைகண் மாயுமே. 3

விண்ணினண்ணு புல்கிய வீரமாய மால்விடைச்
சுண்ண வெண்ணீறாடினான் சூலமேந்து கையினான்
அண்ணல் கண்ணோர் மூன்றினானானைக்காவு கைதொழ
எண்ணும் வண்ணம் வல்லவர்க் கேதமொன்றுமில்லையே. 4

வெய்ய பாவங்கைவிட வேண்டுவீர்களாண்ட சீர்
மைகொள் கண்டன் வெய்ய தீ மாலையாடு காதலான்
கொய்ய விண்ட நான் மலர்க்கொன்றை துன்று சென்னியெம்
ஐயன் மேய பொய்கை சூழானைக்காவு சேர்மினே. 5

நாணு மோர்வு சார்வு முன்னகையுமுட்கு நன்மையும்
பேணுறாத செல்வமும் பேச நின்ற பெற்றியான்
ஆணும் பெண்ணுமாகிய வானைக்காவிலண்ணலார்
காணுங்கண்ணு மூன்றுடைக் கறை மிடறனல்லனே. 6

கூரும்மாலை நன்பகற் கூடிவல்ல தொண்டர்கள்
பேருமூருஞ் செல்வமும் பேசநின்ற பெற்றியான்
பாரும் விண்ணுங்கை தொழப் பாயுங்கங்கை செஞ்சடை
ஆரநீரொடேந்தினானானைக்காவு சேர்மினே. 7

பொன்னமல்கு தாமரைப் போது தாது வண்டினம்
அன்னமல்கு தண்டுறை யானைக்காவிலண்ணலைப்
பன்ன வல்ல நான் மறை பாடவல்லதன்மையோர்
முன்னவல்லர் மொய் கழறுன்னவல்லர்விண்ணையே. 8

ஊனொடுண்டனன் றென யூனொடுண்டதீதென
ஆனதொண்டரன் பினாற் பேசநின்றதன்மையான்
வானொடொன்று சூடினான் வாய்மையாக மன்னி நின்
றானொடஞ்சு மாடினா னானைக்காவு சேர்மினே. 9

கையிலுண்ணுங்கை யருங்கடுக்கடின் கழுக்களும்
மெய்யைப் போர்க்கும் பொய்யரும் வேத நெறியை யறிகிலார்
தையல் பாகமாயினான் றழலதுருவத் தானெங்கள்
ஐயன் மேய பொய்கை சூழானைக்காவு சேர்மினே. 10

ஊழி யூழி வையகத்துயிர்கடோற்றும் வானொடும்
ஆழியானுங் காண்கிலா வானைக் காவிலண்ணலைக்
காழி ஞான ஸம்பந்தன் கருதிச் சொன்ன பத்திவை
வாழியாகக் கற்பவர் வல்வினை கண் மாயுமே. 11

திருக்கயிலாயமுந் திருவானைக்காவுந் திருமயேந்திரமுந் திருவாரூருங் கூடச் சதுக்கம்.

மண்ணதுவுண்டரி மலரோன் காணா, வெண்ணாவல் விரும்பு மயேந்திரும்
கண்ணது வோங்கியரி கயிலையாரும், அண்ணலாரூராதி யானைக்காவே. 1

வந்து மாலயனவர் காண்பரியார், வெந்த வெண்ணீரணி மயேந்திரும்
கந்தவார் சடையுடைக் கயிலையாரும், அந்தணாரூராதி யானைக்காவே. 2

மாலயன் றேடியமயேந்திரும் காலனையுயிர் கொண்ட கயிலையாரும்
வேலைய தோங்கும் வெண்ணாவலாரும், ஆலையாரூராதி யானைக்காவே. 3

கருடனை யேறரியய னோர் காணார், வெருள்விடையேறியமயேந்திரும்
கருடரு கண்டத் தெங்கயிலையாரும், அருளணாரு ராதியானைக்காவே. 4

மதுசூதனனான் முகன் வணங்கரியார், மதியதுசொல்லிய மயேந்திரும்
கதிர் முலைபுல்கிய கயிலையாரும், அதியனா ரூராதியானைக்காவே. 5

சக்கரம் வேண்டுமோல் பிரமன்காணா, மிக்கவர்கயிலை மயேந்திரும்
தக்கனைத்த லையரிதழலுருவ ரக்கணியவராரூராதி யானைக்காவே. 6

கண்ணனு நான்முகன் காண்பரியார், வெண்ணாவல் விரும்பு மயேந்திரும்
கண்ணப்பர்க்கருள் செய்த கயிலை யெங்கள், அண்ணலாரூராதி யானைக்காவே. 7

கடல் வண்ண னான்முகன் காண்பரியார், தடவரை யரக்கனைத் தலை நெரித்தார்
விட மதுவுண்ட வெம் மயேந்திரும், அடல் விடையாரூராதியானைக்காவே. 8

ஆதி மாலயனவர் காண்பரியார், வேதங்கடுதி செயு மயேந்திரும்
காதிலோர் குழையுடைக் கயிலையாரும், ஆதியாரூரெந்தை யானைக்காவே. 9

அறிவில மண் புத்தாறிவு கொள்ளேல், வெறிய மான் கரத்தாரூர் மயேந்திரும்
மறி கடலோனயன் றேடத்தானும், அறிவறிய கயிலையோனானைக்காவே. 10

ஏன மாலயனவர் காண்பரியார், கானமார் கயிலை நன் மயேந்திரும்
ஆனமாரூராதி யானைக்காவை, ஞான சம்பந்தன் றமிழ் சொல்லுமே. 11

அப்பர் என்கிற திருநாவுக்கரசு சுவாமிகளருளிச் செய்தது:—

ஆறாந் திருமுறை—திருத்தாண்டகம்.

முன்னானைத்தோல்போர்த்த மூர்த்திதன்னை மூவாதசிந்தையே மனமே வாக்கே
தன்னானை யாப்பண்ணி யேறினானைச் சார்தற்கரியானை தாதைதன்னை
யென்னானைக் கன்றினையென் னீசன்றன்னை யெறிநீர்த் திரையுகளுங் காவிரிசூழ்
தென்னானைக் காவானைத் தேனைப் பாலைச் செழுநீர்த் திரளைச்சென்றாடினேனே. 1

மருந்தானை மந்திரிப்பார் மனத்துளானை வளர்மதியஞ் சடையானை மகிழ்ந்தேனுள்ளத்
திருந்தானை யிறப்பிலியைப் பிறப்பிலானை யிமையவர்தம் பெருமானை யுமையாளஞ்சக்
கருந்தான மதகளிற்றி னுரிபோர்த்தானைக்கனமழுவாட்படையானைப் பலிகொண்டூர்
திரிந்தானைத் திருவானைக் காவுளானைச் செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. 2

முற்றாத வெண்டிங்கட் கண்ணியானை முந்நீர்நஞ்சுண்டிமையோர்க்கமுதநல்கு
முற்றானைப் பல்லுயிர்க்குந் துணையானானை யோங்காரத் துட்பொருளை யுலகமெல்லாம்
பெற்றானைப் பின்னிரக்கஞ் செய்வான்றன்னைப் பிரானென்றுபோற்றாதார் புரங்கண்மூன்றுஞ்
செற்றானைத்திருவானைக் காவுளானைச் செழுநீர்த்திரளைச் சென்றாடினேனே. 3

காராரு மணிமிடற்றெம் பெருமான்றன்னைக் காதில்வெண்குழையானைக்கமழ் பூங்கொன்றைத்
தாரானைப் புலியதளி னுடையானைத் தானன்றி வேறொன்று மில்லாஞானப்
பேரானைமணியார மார்பினானைப் பிஞ்ஞகனைத் தெய்வநான் மறைகள் பூண்ட
தேரானைத் திருவானைக் காவுளானைச் செழுநீர்த் திரளைச்சென் றாடினேனே. 4

பொய்யேதுமில்லாத மெய்யன்றன்னைப் புண்ணியனை நண்ணாதார் புரநீறாக
எய்தானைச்செய்தவத்தின் மிக்கான்றன்னை யேறமரும் பெருமானையிடமானேந்துங்
கையானைக்கங்காளவேடத்தானைக் கட்டங்கக்கொடியானைக்கனல்போன்மேனிச்
செய்யானைத் திருவானைக்காவுளானைச் செழுநீர்த்திரளைச் சென்றாடினேனே. 5

கலையானைப்பாசுபதபாணியானைக்கனவயிரத்திரளானைமணிமாணிக்க
மலையானையென்றலையினுச்சியானைவார்தருபுன்சடையானைமயானமன்னு
நிலையானைவரியரவுநாணுக்கோத்துநினையாதார்புரமெறியவளைத்தமேருச்
சிலையானைத்திருவானைக்காவுளானைச்செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. 6

ஆதியனையெறிமணியினோசையானையண்டத்தார்க்கறிவொண்ணாதப்பாண்மிக்க
சோதியனைத் தூமறையின்பொருளான்றன்னைச் சுரும்பமருமலர்க்கொன்றைத் தொன்னூல் பூண்ட
வேதியனை யறமுரைத்த பட்டன்றன்னை விளங்குமலரயன்சிரங்களைந்திலொன்றைச்
சேதியனைத்திருவானைக்காவுளானைச்செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. 7

மகிழ்ந்தானைக் கச்சியேகம்பன்றன்னை மறவாதுகழனினைந்து வாழ்த்தியேத்திப்
புகழ்ந்தாரைப்பொன்னுலகம் ஆள்விப்பானைப்பூதகணப் படையானைப்புறங்காட்டாட
லுகந்தானைப்பிச்சையேயிச்சிப்பானை யொண்பவளத்திரளையென்னுள்ளத்துள்ளே
திகழ்ந்தானைத்திருவானைக்காவுளானைச்செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. 8

நசையானைநால்வேதத்தப்பாலானை நல்குரவுந்தீப்பிணிநோய்காப்பான்றன்னை
யிசையானையெண்ணிறந்தகுணத்தான்றன்னை யிடைமருதுமீங்கோயுநீங்காதேற்றின்
மிசையானைவிரிகடலுமண்ணும்விண்ணுமிகுதியும்புனலெறிகாற்றாகியெட்டு
திசையானைத்திருவானைக்காவுளானைச்செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. 9

பார்த்தானைக்காமனுடல்பொடியாய்வீழப் பண்டயன்மாலிருவர்க்குமறியாவண்ணஞ்
சீர்த்தானைச்செந்தழல்போலுருவினானைத் தேவர்கடம்பெருமானைத்திறமுனாதே
யார்த்தோடிமலையெடுத்தவிலங்கைவேந்த னாண்மையெலாங்கெடுத்தவன்றனிடரப்போதே
தீர்த்தானைத் திருவானைக் காவுளானைச் செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. 1

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியது:—

ஏழாந்திருமுறை—பண்—காந்தாரம்.

மறைகளாயினநான்குமற்றுளபொருள்களுமெல்லாந்
துறையுந்தோத்திரத்திறையுந்தொன்மையுநன்மையுமாய
வறையும்பூம்புனலானைக்காவுடையாதியைநாளு
மிறைவனென்றடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. 1

வங்கமேவியவேலைநஞ்செழவஞ்சர்கள்கூடித்
தங்கண்மேலடராமையுண்ணெனவுண்டிருள்கண்ட
னங்கமோதியவானைக்காவுடையாதியைநாளு
மெங்களீசனென்பார்களெம்மையுமாளுடையாரே. 2

நீலவண்டறைகொன்றைநேரிழைமங்கையோர்திங்கள்
சாலவாளரவங்கடங்கியசெஞ்சடையெந்தை
யாலநீழலுளானைக்காவுடையாதியை நாளும்
ஏலுமாறுவல்லார்களெம்மையுமாளுடையாரே. 3

தந்தையாயுலகுக்கோர்தத்துவன்மெய்த்தவத்தோர்க்குப்
பந்தமாயினபெருமான்பரிசுடையவர்திருவடிக
ளந்தண்பூம்புனலானைக்காவுடையாதியைநாளு
மெந்தையென்றடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. 4

கணைசெந்தீயரவநாண்கல்வளையுஞ்சிலையாகத்
துணைசெய்மும்மதின்மூன்றுஞ்சுட்டவனேயுலகுய்ய
வணையும்பூம்புனலானைக்காவுடையாதியைநாளு
மிணைகொள்சேவடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. 5

விண்ணின்மாமதிசூடிவிலையிலிகலனணிவிமலன்
பண்ணினேர்மொழிமங்கைபங்கினன்பசுவுகந்தேறி
யண்ணலாகியவானைக்காவுடையாதியைநாளு
மெண்ணுமாறுவல்லார்களெம்மையுமாளுடையாரே.

தாரமாகியபொன்னித்தண்டுறையாடிவிழுத்து
நீரினின்றடிபோற்றிநின்மலகொள்ளெனவாங்கே
யாரங்கொண்டவெம்மானைக்காவுடையாதியைநாளு
மீரமுள்ளவர்நாளுமெம்மையுமாளுடையாரே. 7

உரவமுள்ளதோருழையினுரிபுலியதளுடையானை
விரைகொள்கொன்றையினானைவிரிசடைமேற்பிறையானை
யரவம்வீக்கியவானைக்காவுடையாதியைநாளு
மிரவுமெல்லியும்பகலுமேத்துவரெம்மையுமாளுடையாரே. 8

வலங்கொள்வாரவர்தங்கள்வல்வினை தீர்க்குமருந்து
கலங்கக்காலனைக்காலாற்காமனைக்கண்சிவப்பானை
யலங்கனீர்பெருமானைக்காவுடையாதியைநாளு
மிலங்குசேவடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. 9

ஆழியாற்கருளானைக்காவுடையாதிபொன்னடியி
னீழலேசரணாகநின்றருள்கூரநினைந்து
வாழவல்லவன்றொண்டன்வண்டமிழ்மாலைவல்லார்போ
யேழுமாபிறப்பற்றுவெம்மையுமாளுடையாரே. 10

தாயுமானவர் பாடியது:—

வடமிட்டொளிர் பிராணவாயுவெனு நிகளமோடு கமனஞ்செயு
மனமெனும்பெரிய மத்தயானையையென் வசமடக்கிடின் முமண்டலத்
திட்டமுற்றவளராஜ யோகமிவன் யோக மென்றறிஞர் புகழவே
யேழை யேனுலகினீடுவாழ்வன்; இனி யங்கிதற்கு மனு மானமோ?

பட்டவர்த்தனர் பாரவு சக்ரதர பாக்யமான சுகயோகமும்,
பாரகாவிய கவித்வநான்மறை பாராயணஞ் செய்மதியூகமு,
மட்டசித்தியு நலன்பருக்கருள விருது கட்டிய பொனன்னமே!
அண்டகோடி புகழ் காவை வாழுமகி லாண்டநாயகி யெனம்மையே!

திருவானைக்காவல் ஆடிப்பூர தெப்போத்ஸவம் நடக்கும் குளம்.

அப்பர்சுவாமிகள் பாடியது:—

ஆறும்திருமுறை—திருத்தாண்டகம்.

எத்தாயரெத்தந்தையெச்சுற்றத்தா ரெம்மாடு சும்மாடாமேவர்நல்லார்
செத்தால்வந்துதவுவாரொருவரில்லைச்சிறுவிறகாற் றீமூட்டிச்செல்லாநிற்பர்
சித்தாயவேடத்தாய் நீடுபொன்னித் திருவானைக்காவுடைய செல்வாவென்ற
னத்தாவுன்பொற்பாத மடையப்பெற்றா லல்லகண்டங் கொண்டடியேனென்செய்கேனே. 1

ஊனாகியுயிராகியதனுணின்றவுணர்வாகிப் பிறவனைத்துநீயாய்நின்றாய்
நானேதுமறியாமேயென்னுள்வந்துநல்லனவுந்தீயனவுங்காட்டாநின்றாய்
தேனாருங் கொன்றையனேநின்றியூராய் திருவானைக்காவிலுறை சிவனேஞான
மானாயுன் பொற்பாதமடையப் பெற்றா லல்லகண்டங் கொண்டடியே னென் செய்கேனே. 2

ஒப்பாயிவ்வுலகத்தோடொட்டிவாழ்வா னொன்றலாத்தவத்தாரோடுடனேநின்று
துப்பாருங்குறையடிசிறுற்றினத்துன்றிறமறந்து திரிவேனைக்காத்துநீவந்
தெப்பாலுநுண்ணுணர்வேயாக்கி யென்னையாண்டவனேயெழிலானைக்காவாவானோ
ரப்பாவுன்பொற்பாதமடையப்பெற்றா லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. 3

நினைத்தவர்க ணெஞ்சுளாய்வஞ்சக்கள்வாநிறைமதியஞ் சடைவைத்தாயடையாதன்பான்
முனைத்தவர்கள்புரமூன்றுமெரியச்செற்றாய் முன்னானைத்தோல்போர்த்தமுதல்வாவென்றுங்
கனைத்துவருமெருதேறுங் காளகண்டாகயிலாயமலையாநின்கழலேசேர்ந்தே
னனைத்துலகும் ஆர்வானேயானைக்காவா லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. 4

இம்மாயப்பிறப்பென்னுங் கடலாந்துன்பத் திடைச்சுழிப்பட்டிளைப்பேனை யிளையாவண்ணங்
கைம்மான மனத்துதவிக் கருணைசெய்து காதலருளவைவைத்தாய் காணநில்லாய்
வெம்மானமதகரியி னுரிவைபோர்த்த வேதியனே தென்னானைக் காவுண்மேய
வம்மானின் பொற்பாத மடையப்பெற்றா லல்லகண்டங்கொண்டடியே னென்செய்கேனே. 5

உரையாரும் புகழானே யொற்றியூரா கச்சியேகம்பனே காரோணத்தாய்
விரையாருமலர்தூவி வணங்குவார்பான் மிக்கானேயக்கரவ மாரம்பூண்டாய்
திரையாரும் புனற்பொன்னித் தீர்த்தமல்கு திருவானைக் காவிலுறைதேனேவானோ
ரரையாவுன் பொற்பாத மடையப்பெற்றா லல்லகண்டங்கொண்டடியே னென்செய்கேனே. 6

மையாரு மணிமிடற்றாய் மாதோர்கூறாய் மான்மறியு மாமழுவு மனலுமேந்துங்
கையானே காலனுடல் மாளச்செற்ற கங்காளாமுன்கோளும் விளைவுமானாய்
செய்யானே திருமேனி யரியாய்தேவர் குலக்கொழுந்தே தென்னானைக் காவுண்மேய
வையாவுன் பொற்பாத மடையப்பெற்றா லல்லகண்டங்கொண்டடியே னென்செய்கேனே. 7

இலையாருஞ் சூலத்தா யெண்டோளானே யெவ்விடத்து நீயலா தில்லை யென்று
தலையாரக்கும்பிடுவார் தன்மையானே தழன்மடுத்தமாமேருக்கையில்வைத்த
சிலையானே திருவானைக் காவுண்மேய தீயாடீசிறுநோயால் நலிவுண்டுள்ள
மலையாதே நின்னடியே யடையப்பெற்றா லல்லகண்டங் கொண்டடியே னென்செய்கேனே. 8

விண்ணாரும் புனல்பொதி செஞ்சடையாய்வேத நெறியானே யெறிகடலினஞ்சமுண்டா
யெண்ணாரும் புகழானே யுன்னையெம்மானென்றென்றேநாவினிலெப் பொழுதுமுன்னிக்
கண்ணாரக் கண்டிருக்கக் களித்தெப்போதுங்கடிபொழில்சூழ் தென்னானைக் காவுண்மேய
வண்ணாநின்பொற்பாதமடையப்பெற்றா லல்லகண்டங்கொண்டடியே னென்செய்கேனே. 9

கொடியேயும் வெள்ளேற்றாய் கூளிபாடக் குறட்பூதங் கூத்தாட நீயுமாடி
வடிவேயுமங்கைதனை வைத்தமைந்தா மதிலானைக்காவுளாய் மாகாளத் தாய்
படியேயுங் கடலிலங்கைக் கோமான்றன்னைப் பருமுடியுந் திரடோளுமடர்த்துகந்த
வடியேவந் தடைந்தடிமை யாகப்பெற்றா லல்லகண்டங் கொண்டடியேனென்செய்கேனே. 10



திருச்சிராப்பள்ளி மலையின்மேலிருக்கும் உச்சிப்பிள்ளையார் கோயில்.

திரிச்சிராப்பள்ளி.

ஒரு ஸமயம் வாயுபகவானுக்கும் ஆதிசேஷனுக்கும் மேரு மலையில் உண்டான சண்டையில் அப்பொழுது அவ்விட மிருந்து வெளியாகிய மேருவின் மூன்று சிகரங்களுள் ஒன்று "தக்ஷிண கைலாஸம்" என்ற திருச்சிராப்பள்ளியில் விழுந்தது. இவ்வூர் சென்னையிலிருந்து தனுஷ்கோடி போகும் தென் இந்தியா இருப்புப் பாதையில் உள்ளது.

"திரிசிரன்" என்ற மூன்று தலை வாய்ந்த அசுரன் ஒருவன் இங்கு ஈசுவரனைத் துதித்துத் தான் கோரிய வரமெல்லாம் பெற்றதனால் இத்தலத்திற்கு இப்பெயர் வந்ததெனக் கூறுகிறார்கள். இவ்வூருக்குச்சிலாலிகிதங்களில் சிற்றம்பர் என்றும், இக்காட்டிற்குப் பத்து, பதினொன்றாவது நூற்றாண்டுகளில் சோழதேசத்தை அக்காலத்தில் வெகு கியாதியுடன் ஆண்டுவந்த முதலாவது ராஜராஜன் பட்டப்பெயர்களைக்கொண்டு பாண்டிகுலாசனி நாடு, தென்கரை கோளாந்தகவளநாடு என்றும் அதன் பின்னர் ராஜகம்பீரவள நாடு என்றும் பெயர்கள் வழங்கப்பட்டன.



திருச்சிராப்பள்ளி மலை முன்பக்கம். 100 வருஷங்களுக்கு முன் எடுத்த படம்.

வரகுணபாண்டிய மன்னனாகிய மாறஞ்சடையன் மதுரையிலிருந்து திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் பிரவேசித்த காலத்தில் இவ்வூரில் தனது பெயரால் ஒரு தடாகத்தை 'வரகுணனேரி' என்று வெட்டிவைத்தனராம். அது பின்னர் வரகனேரி என்று பெயர் வழங்கலாயிற்று. தற்காலம் அது தூர்க்கப்பட்டு இந்நகரின் ஒரு பாகமாகிய பேட்டையாய் அமைந்திருக்கிறதென்று சொல்லுகிறார்கள்.

பதினாறாம் நூற்றாண்டில் முகம்மதியர்கள் கலகம் அதிகப்பட மலைக்கோயிலை பந்தோபஸ்து செய்ய அப்பொழுது இவ்வூர் விஜயநகர சம்ஸ்தானப்பிரதிநிதியாக ஆண்டுவந்த விசுவநாதநாயகர்கள் சுவர் எடுப்பித்தனர். மலையடியிலும் இரட்டைச்சுவர்களால் மதில்கள் ஒன்றுக்கொன்று முப்பதடி தூரத்தில் கட்டிவைத்தனர். வெளிமதிலைச்சுற்றி அகழியும் எற்படுத்தி அதற்கு நீர் பாயக்காவேரியிலிருந்து பூமிக்

திருச்சிராப்பள்ளி மலையின்மேலேறும் வாசற்படி. சென்னை கவர்னர் பென்ட்லண்டு பிரபுவும் அவர் சீமாட்டியும் நிற்கிறார்கள்.

திருச்சிராப்பள்ளி தெப்பக்குளமும் அதன் தென்கரையிலுள்ள எஸ். பி. ஜி. காலேஜும்.

குள்ளாகக் கால்வாயும் வெட்டி வைத்தனர். தற்காலம் அழகுடன் விளங்கும் தெப்பக்குளமும் அவரது காலத்தில் உண்டானதுதான்.

அப்பு ஸ்தலமான திருவானைக்காவும், பெயர் பெற்ற விஷ்ணுஸ்தலமான ஸ்ரீரங்கமும் இதனை அடுத்துத்தான் இருக்கின்றன.

மலையின் பெருமை.

இங்குள்ள உன்னதமான பாறை இவ்வூரில் எங்கிருந்து பார்த்தாலும் நன்கு தெரியக்கூடியது. இப்பாறை மேற்கண்ட விவரப்படி கைலாய கிரியின் ஓர் பாகமே என்பது அனேகர் அபிப்பிராயம். இவ்வூரின் வழியாக ஓடும் காவேரி நதியினருகில் நின்று பார்த்தால் இப்பாறை மிகவும் நன்றாகத் தெரியும். இம்மலையிலுள்ள மூர்த்தியை பிரம்மா, இந்திரன், நாககன்னியர், ஸ்ரீராமர், ஹனுமான் முதலியோர் பூஜித்திருக்கிறார்களாம். ஹனுமார் பூஜித்த குறி இன்னும் காணப்படுகிறது.



திருச்சிராப்பள்ளி மலை முழுமையும் மின்னல் தீபங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் ராத்திரி ஸமயத்தில் நமது சிற்பியால் வரையப்பட்டது.



திருச்சிராப்பள்ளி மலையின் பின்பக்கமும் தெப்பக்குளமும்.

சுவாமி மேற்கு பார்த்திருப்பதின் காரணம்.

இந்த ஊர்ப் பக்கத்திலிருக்கும் உறையூர் சோழ ராஜாக்களுக்கு ராஜதானியாக இருந்த தென்பது மாத்திரமே யல்லாமல், மதுரை நாயக்க அரசர்களும் கூட இப்பாறைக் கருகில் தங்களது அரண்மனையை ஏற்படுத்திக் கொண்டு இவ்வூரை ராஜதானியாகக் கொண்டிருந்தார்களாம்.

சாரமாரிஷி பாதாளத்திலிருந்து கொண்டு வந்து பயிர்செய்த செவ்வந்திப்புஷ்பத்தை உறையூரிலிருந்த பராந்தகச் சோழராஜன் தன் தேவிக்குக் கொடுத்தான். மகரிஷி தடுத்தும் கேளாமல் கர்வத்தினால் ஈசுவரனுக்கு அர்ப்பணஞ் செய்யவேண்டிய புஷ்பத்தை அரசன் பட்டமகிஷிக்குக் கொடுத்தான். ஈசுவரன் கோபமடைந்து மேற்கு முகம் திரும்பி அவ்வரசனது ராஜதானியாகிய உறையூரை மண்மாரி பெய்வித்து அழித்து விட்டாராம். ஆனாலும் நந்திகேசுவரர் முதலிய மற்றைய பரிவார தேவதைகள் கிழக்கு பார்த்தபடியே இருந்து வருகிறார்கள்.

ஈசுவரன் மருத்துவஞ் செய்த அத்புதம்.

காவிரிப்பூம்பட்டினத்தில் வாஸம் செய்த ரத்தினகுப்தன் என்பவன் புத்திரப்பேறு



திருச்சிருப்பள்ளி மலையின் பின்பக்கமும் தெப்பக்குளமும். (மற்ளுரு காக்ஷி)

வேண்டித் தவம் செய்ப அவனுக்கு ஒரு பெண் உண்டாக அக் குழந்தையைத் திரிசிரபுர தனதுப்தன் என்பவருக்கு விவாகம் செய்து கொடுத்தான். அப்பெண் வெகு பக்தியுடன் பிரதி வெள்ளிக்கிழமையும் சிவபிரானைத் தரிசனம் செய்து வந்தாள். தகப்பன் இறந்தபிறகு அந்தப் பெண் கர்ப்பவதி யானுள். பிரசவகாலத்திற்கு அவள் தாய் பிரசவ மருந்துகளுடன் வந்து காவேரி வெள்ளத்தினுல் ஆற்றைத் தாண்ட முடியாமல் தயங்கினுள். அந்த ஸமயம் கர்ப்பவதியாகிய பெண்ணைக் காப்பாற்ற ஈசுவான் அவள் தாய் உருவத்துடன் வந்து மருத்துவம் பார்த்துவரக் காவிரிப்பிரவாஹம் வடிந்ததும் தாயாரும் வந்து சேர்ந்தாள். அந்த ஸமயம் இருவரில் எவர் தன் தாயாரென்று அறிந்து கொள்ள அந்தப் பெண் யத்தனிக்கையில் மாறு வடிவம் கொண்டிருந்த ஈசுவான் மறைந்து விட்டார். அது முதல் சுவாமிக்குத் "தாயுமானவர்" என்று பெயருண்டாயிற்று.

உச்சிப்பிள்ளையார்.

இம்மலையின்பேரில் தனி சந்நிதியுடன் விளங்கும் பிள்ளையாருக்கு 'உச்சிப்பிள்ளையார்' என்று பெயர். ஆதிகாலம் முதல் ஏற்பட்டதற்கு ஒரு கதை உளது. அதாவது ஸ்ரீராம பட்டாபிஷேக மகோத்ஸவகாலத்தில் தமக்கு இராவண யுத்தத்தில் உதவிபுரிந்தவர்களுக்கு பரிசளித்த காலத்தில் ஸ்ரீராமர் விபீஷணருக்கு தம்முடைய குலதெய்வமாகிய ஸ்ரீரெங்கநாத விக்கிரஹத்தைக்கொடுத்தனர். அதை அவர் எடுத்து தமது தேசம் திரும்புகையில் காவிரியின் நடுவில் வந்து தங்கினதும் அதை ஒருவரிடம் கொடுத்து தமது தேக சுத்தியை செய்துகொள்ள விரும்பினவர் அந்த ஸமயத்தில் ஒரு பிரம்மசாரியைக்கண்டார். உடனே



திருச்சிராப்பள்ளி மலையில் உள்ள குகை.

அந்த விக்ரஹத்தை இந்த பிரம்மசாரியிடம் கொடுத்து தான் தனது அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு திரும்பும் வரையில் வைத்திருக்கவேண்டி அந்தப்படி வைத்துக்கொள்ள சம்மதித்தாலும் தான் மூன்று தடவை கூப்பிடுவதற்குள் விபீஷணர் வந்து அதை வாங்கிக் கொள்ளாவிட்டால் பூமியில் வைத்துவிட்டுப் போய்விடுவதாகச் சொன்னார். சரீரசுத்தி செய்துகொண்டு விபீஷணர் திரும்புமுன்னர் மூன்று தடவை கூப்பிட்டும் அவர் வாராததால் அந்த பிரம்மசாரி அந்த விக்ரஹத்தை அவ்விடம அதாவது இப்பொழுது ஸ்ரீரங்கம் கோயிலாயிருக்குமிடத்தில் வைத்துவிட்டு இந்த பிரம்மசாரி போய்விட்டார். இப்படிப்போய் இவர் திருச்சிராப்பள்ளி மலையின் மீது எறும் சமயத்தில் விபீஷணர் இந்தபிரம்மசாரியை தண்டிப்பதற்காக ஓடி வந்து அவர் தலையிற் குட்டினார். இப்படிச்செய்ததும் இந்த பிரம்மசாரி தமது நிஜரூபமாகிய விநாய

மலைமேலிருந்து மேற்குப் பக்கமாக உள்ள திருச்சிராப் பள்ளியின் காக்ஷி.

திருச்சிராப்பள்ளி மலையில் உள்ள மற்றொரு குகை.

கர் உருவத்தைக் காட்டினார். இப்படி விநாயகர் மாறுவேடம் பூண்டு ஸ்ரீரங்கநாதர் விக்கிரஹத்தை ஸ்ரீரங்கத்தில் நிலைநாட்டினது பகவானின் ஆக்ஞைப்படி சோழதேசத்திலே பக்தர்களின் வேண்டுகோளுக்காக அவர்களுக்கு தர்சனம்கொடுக்க வேண்டியே. இப்பொழுதும் இந்த உச்சிப் பிள்ளையாருக்கு விபீஷணர் குட்டிய அடையாளமாக தலையில் பள்ளமிருக்கிறது.

திருச்சிராப்பள்ளியில் யாத்திரிகர்கள் வந்தால் தங்குவதற்காக சின்னையாபிள்ளையால் கட்டப்பட்டிருக்கும் சத்திரம்.

தாயுமான சுவாமி சரித்திரம்.

தாயுமானவர் சோழதேசத்திலுள்ள திருமறைக்காடெனப்படும் வேதாரண்யத்தில் வேளாளர் குலத்தில் பிறந்தவர். இவரது தகப்பனாராகிய கேடிலியப்ப பிள்ளை திருச்சிறாப்பள்ளியில் விஜயநகர ராஜாங்கத்தாரின் பிரதிநிதியாகிய சொக்கநாத நாயக்கரிடம் மந்திரியாக இருந்தார். தமது மோட்சத்தைக் கருதி அவ்விடம்

திரிச்சிராப்பள்ளி மலையிலுள்ள குகையிலிருக்கும் சிலாவிக்கிரகங்கள்.

மலையிலுள்ள தாயுமானவரைப் பிரார்த்தித்ததன் காரணமாக பிறந்த இக்குழந்தைக்கு அந்த ஈசுவரன் பெயரையிட்டார். காலாகாலத்தில் வித்தியாரம்பம் செய்விக்கப்பட்ட இவர் எல்லா சாஸ்திரங்களிலும் வல்லவரானார். இவரது தகப்பனார் காலமானதும் ராஜாவின் ஆக்ஞைப்படி தமது தகப்பனார் ஸ்தானத்தை வகித்தார். இவ்வாறு லௌகிகமுறையிலிருந்த போதிலும் தெய்வபக்திமிகுதியால் பல க்ஷேத்திரங்கள் சென்று கடைசியாகச் சிதம்பரம் போய்த் திருச்சினாப்பள்ளிக்குத் திரும்பினார்.

இப்படித் திரும்பிவந்து மலையில் சென்று தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் நிஷ்டையிலிருக்கையில் பகவான் அநுக்கிரகம் பெற்றார். ஆனாலும் பகவான் ஆக்ஞைப்படி சிலகாலம் மந்திரி உத்தியோகத்தை நடத்தி ராஜாவுக்கும் உபதேசம் செய்தார். ராஜா காலமானதும் ராஜபத்னி இவரது திவ்ய சரீரத்தைப்பார்த்து மோஹித்துத் தனக்குப் புத்திரன் இல்லாமையால்

திருவானைக்காவலிலிருந்து திருச்சிராப்பள்ளிக்குப் போகும் வழியிலுள்ள காவேரிப்பாலம்.



திருச்சிராப்பள்ளி மலையும் அதற்குமேல் பக்கமிருக்கும் வீடுகளும் தெப்பக்குளமும்.

இவரையே தனது ராஜ்யத்திற்கு அதிபதியாக்க எண்ணங்கொண்டாள். இதை அறிந்த இவர் அவளுக்கு சன்மார்க்கத்தைப் போதித்து அதன் பிறகு அங்கு தங்குவது தனது பெருமைக்குக் குறைவென்று தீர்மானித்துத்தேவையம்பதி சென்றார். அந்த ஸமயம் இவரது பந்துக்கள் இவரைக் கலியாணம் செய்து கொள்ள வேண்ட தமது ஜன்ம பூமியாகிய வேதாரண்யத்திலுள்ள ஒரு கன்னிகையை மணந்து ஒரு ஆண் குழந்தையைப் பெற்றார். பின்னர் சில காலத்திற்கெல்லாம் குடும்பத்தை விட்டு விலகி மோக்ஷம



திருச்சிராப்பள்ளி மலை. ராத்திரி காலத்தில் தீபங்களால் அலங்காரமும் வாணவேடிக்கையும்.

டைய வெண்டித் திருவாரூர், திருவண்ணாமலை, காஞ்சீபுரம் முதலிய ஸ்தலங்கள் சென்று திருப்பரங்குன்றம் மார்க்கம் ராமேசுவரம் போனார். அவ்விடத்தில் அந்த ஸமயம் மழை யில்லாமல் படும் கஷ்டத்தை ஸகிக்கமுடியாமல் பதிகம் பாடி மழை பெய்யச் செய்தார்.

இவரது அருமையான பாடல்களைப் படியாத தமிழர் கிடையாது. இவர் காலம் அநேகமாய்த் திருச்சிராப்பள்ளியில் சென்றதினாலும், இவருக்கு அவ்வூர் மூர்த்தியின் பெயரிடப்பட்டு அவராலேயே உபதேசம் செய்யப்பட்டதாலும் அவ்வூருக்கு இவராலும் ஒரு பெருமை ஏற்பட்டிருக்கிறது.

சிலாசாஸனம்.

பாறைக் குகைக்கு வெளியில் உள்ள கல்தூண் ஒன்றில் "சித்திரை உத்ஸவம்" ஒன்பது நாட்களிலும் பிராமணர்களுக்கு அன்னமளிக்க ஐந்து களஞ்சு தரிசு நிலம் பயிர் செய்யும் பாத்தியதையை அளித்து ஒருவருக்குச் சோழராஜா ராஜராஜகேஸரி வர்மன் கிரயம் செய்து கொடுத்த விஷயம் வரையப்பட்டுள்ளது. இங்குள்ள பாறையின் மீதுள்ள ஓர் குகையின் இடது பக்கத்துதூண் ஒன்றில் பல்லவ அரசன் முதலாவது மஹேந்திரவர்மன் மலையின் மீது கோயிலைக் கட்டி லிங்கப் பிரதிஷ்டை செய்வித்த விஷயம் கூறப்பட்டுள்ளது.

இம் மஹேந்திரவர்ம மஹாராஜா ஏழாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் காஞ்சிபுரத்தில் அரசு செலுத்தியவர். முதல் முதலில் இவர்தான் மலையைக் குடைந்து குகைக் கோயில்களை நிர்மாணம் செய்யும் பெருமையைப் பெற்றவர். சுண்ணாம்பு, கல் முதலியவைகளால் கட்டப்பட்ட கோயில்கள் வெகுகாலம் நீடித்திராததினால், நிலையாக மலையிலேயே குகை குடைந்து கோயிலை உற்பத்தி செய்தார். இப்படிச் செய்த விவரம் விழுப்புரம் ஸமீபத்திலுள்ள மண்டகப்பட்டு என்னுமிடத்தில் சிலாசாஸனத்தில் வெட்டியிருக்கிறது.

இவர் தான் இம்மலையிலுள்ள குகையில் தான் லிங்கப் பிரதிஷ்டை செய்த விவரத்தையும் சோழ தேசத்திலுள்ள காவேரி நதியின் பெருமையையும் கல் வெட்டில் தெரிவித்திருக்கிறார்.

தேவாரப் பாடல்கள்.

திருஞானஸம்பந்தர் பாடியது:—

முதல் திருமுறை—பண்—குறிஞ்சி.

நன்றுடையானைத் தீய தில்லானை நரை வெள்ளேறு
ஒன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றுடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிருமே. 1

கைம்மகவேந்திக் கடுவனோடிக் கழைபாய்வான்
செம்முகமந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முகவேழத் தீருரிபோர்த்த விகிர்தா நீ
பைம்முகநாகம் மதியுடன்வைத்தல் பழியன்றே. 2

மந்தம்முழவம் மழலைததும்ப வரைநீழற்
செந்தண்புனமுஞ் சுனையுஞ்சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம்மலர்கள் சடைமேலுடையார் விடையூரும்
எந்தம்மடிக ளடியார்க்கல்ல லில்லையே. 3

துறைமல்குசாரற் சுனைமல்குநீலத் திடைவைகிச்
சிறைமல்குவண்டுந் தும்பியும்பாடுஞ் சிராப்பள்ளிக்
கறைமல்குகண்டன் கனலெரியாடுங் கடவுளெம்
பிறைமல்குசென்னி யுடையவனெங்கள் பெருமானே. 4

கொலைவரையாத கொள்கையர்தங்கண் மதின்மூன்றுஞ்
சிலைவரையாகச் செற்றனரேனுஞ் சிராப்பள்ளித்
தலைவரைநாளுந் தலைவரல்லாமை யுரைப்பீர்காள்
நிலவரைநீல முண்டதும்வெள்ளை நிறமாமே. 5

வெய்யதண்சாரல் விரிநிறவேங்கைத் தண்போது
செய்யபொன்சேருஞ் சிராப்பள்ளிமேவிய செல்வனார்
தையலோர்பாக மகிழ்வர்நஞ்சுண்பர் தலையோட்டில்
ஐயமுங்கொள்வ ரரரிவர்செய்கை யறிவாரே. 6

வேயுயர்சாரற் கருவிரலூகம் விளையாடும்
சேயுயர்கோயிற் சிராப்பள்ளிமேவிய செல்வனார்
பேயுயர்கொள்ளி கைவிளக்காகப் பெருமானார்
தீயுகந்தாட றிருக்குறிப்பாயிற் றாகாதே. 7

மலைமல்குதோளான் வலிகெடவூன்றி மலரோன்றன்
தலைகலனாகப் பலிதிரிந்துண்பர் பழியோரார்
சொலவலவேதஞ் சொல்வலகீதஞ் சொல்லுங்கால்
சிலவலபோலுஞ் சிராப்பள்ளிச்சேடர் செய்கையே. 8

அரப்பள்ளியானு மலருறைவானு மறியாமைக்
கரப்புள்ளிநாடிக் கண்டிலரேனுங் கல்சூழ்ந்த
சிரப்பள்ளிமேய வார்சடைச்செல்வர் மனைதோறும்
இரப்புள்ளீருமமை யேதிலர்கண்டாலிகழாரே. 9

நாணாதுடைநீத் தோர்களுங்கஞ்சி நாட்காலே
ஊணாப்பகலுண் டோதுவோர்களு முரைக்குஞ்சொல்
பேணாதுறுசீர் பெறுதுமெம்பீரெம் பெருமானார்
சேணார்கோயில் சிராப்பள்ளிசென்று சேர்மினே. 10

தேனயம்பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்த னலமிகுபாட லிவைவல்லார்
வானசம்பந்தத் தவரொடுமன்னி வாழ்வாரே. 11

அப்பர்சுவாமிகள் பாடியது:—

ஐந்தாம் திருமுறை—திருக்குறுந்தொகை.

மட்டுவார்குழலாளொடுமால்விடை, இட்டமாவுகந்தேறுமிறைவனார்
கட்டுநீத்தவர்க்கின்னருளேசெயும், சிட்டர்போலுஞ்சிராப்பள்ளிச்செல்வரே. 1

அரியயன்றலைவெட்டிவட்டாடினார், அரியயன்றொழுதேத்துமரும்பொருள்
பெரியவன்சிராப்பள்ளியைப்பேணுவார், அரியயன்றொழவங்கிருப்பார்களே. 2

அரிச்சிராப்பகலைவராலாட்டுண்டு, சுரிச்சிராதுநெஞ்சேயொன்றுசொல்லக்கேள்
திருச்சிராப்பள்ளியென்றலுந்தீவினை, நரிச்சிராதுநடக்குநடக்குமே. 3

தாயுமாயெனக்கேதலைகண்ணுமாய்ப், பேயனேனையுமாண்டபெருந்தகை
தேயநாதன்சிராப்பள்ளிமேவிய, நாயனாரெனநம்வினைநாசமே. 4

தாயுமானவர் பாடியது:—

தந்தை தாயுநீ யெனதுயிர்த்துணையுநீ சஞ்சலமது தீர்க்க
வந்ததே சிகவடிவுநீ யுனையலால் மற்றொரு துணை காணேன்
அந்தமாதியு மளப்பருஞ் சோதியே ஆதியே யடியார்தம்
சிந்தைமேவிய தாயுமா னவனெனும் சிரகிரிப் பெருமானே.

எடுத்த தேகம் பொருளாவி மூன்று நீ யெனக்கொன் றில்லையென மோனநன்னெறி
கொடுத்தபோது கொடுத்தன்றோ பினும் குளறினானென்று கூத்தாட மாயையை
விடுத்தவாறுங்கண் ணீரொடு கம்பலை விலகுமாறுமென் வேட்கை ப்ரவாகத்தைத்
தடுத்தவாறும் புகலாய் சிரகிரித் தாயுமான தயாபரமூர்த்தியே.

நோயும் வெங்கலிப் பேயுந் தொடரநின் நூலிற்சொன்ன முறையிய மாதிநான்
தோயும் வண்ண மெனைக்காக்குங் காவலும் தொழும்புகொள்ளுஞ் சுவாமியு நீ கண்டாய்
ஓயுஞ்சன்ம மினியஞ்சலஞ் சலென் று உலகங்கண்டு தொழவோருருவிலே
தாயுந்தந்தையு மானாய் சிரகிரித் தாயுமான தயாபர மூர்த்தியே.



திரிசிரபுரம் மலை தீபங்களால் அலங்கரிக்கப்பட்டது.



உய்யக்கொண்டான் திருமலையிலிருக்கும் உஜ்ஜீவனாதசுவாமிகோவில்.

உய்யக்கொண்டான் திருமலை

(கற்குடி)

உய்யக்கொண்டான் திருமலை எனப்படும் க்ஷேத்திரம் தேவாரகாலத்தில் "திருக்கற்குடி" என வழங்கி வந்தது. இது திருச்சிராப்பள்ளிக்குத் தென் மேற்கில் மூன்று மைல் தூரத்திலுள்ளது. கோயில் ஒரு சிறிய மலையின் மேல் குடமுருட்டி ஆற்றின் மேற்கிலுள்ளது.

ஈழநாட்டரசன் பூஜித்தது.

இலங்கை மன்னன் ஒருவன் உச்சிகாலத்தில் வந்து இவ்விடமுள்ள மூலலிங்கத்தை பூஜித்து தனது மனோபீஷ்டங்களை அடையப் பெற்றனன். இதன் விவரம் அடியில் கண்ட பாடலால் விளங்கி வரும்.

"செய்யார் மேனியனே திருநீலமிடற்றினனே
மையார் கண்ணி பங்கா மதயானை யுரித்தவனே
கையார் சூலத்தினாய் திருக்கற்குடி மன்னி நின்ற
ஐயா எம்பெருமான் அடியேனையுமஞ்ச லென்னே."

ஸ்தலத்தின் பெயர் மாறியது.

இவ்வூருக்கு உய்யக்கொண்டான் திருமலை என்று பெயர் பின்னர் உண்டானது. இப்பொழுது அவ்விடமுள்ள உய்யக்கொண்டான் வாய்க்காலிலிருந்து நேரிட்டிருக்கவே

ண்டும். 'உய்யக்கொண்டான்' என்னும் பதத்திற்கு 'தவறாமல் குடித்தான்' எனப்பொருள். இப்படிப் பெயரிடப்பட்டது ஒரு காரணம் பற்றி யென்று அது ஸம்பந்தமான கதையிலி ருந்து வெளியாகிறது.

திருச்சிராப்பள்ளியின் மேற்குபக்கத்தில் கரூருக்குப்போகும் ரஸ்தாவில் பேட்ட வாய்தலை என்னுமிடத்திலிருந்து இந்த உய்யக்கொண்டான் வாய்க்கால் ஆரம்பமாகிறது. தஞ்சைமாநகரை ஒரு ஸமயம் ஆண்ட சோழமன்னன் ஒருவன் தனது பிரஜைகள் தண்ணீரின்றி வருந்துவதைப் பார்க்க மனம் சகியாமல் தமது குலதெய்வமாகிய காமாக்ஷி அம்மனைப் பிரார்த்தித்தனன். சொப்பனத்தில் தேவி இந்த மன்னருக்குத் தெரிவித்த தாவது— 'ஒரு பாம்பு தென்பட்டு அது தஞ்சாவூரிலிருந்து புறப்பட்டு அகண்டகாவேரி செல்லும். அது சென்ற பாதையை ஒட்டி ஒரு வாய்க்கால் வெட்டினால் உமது நாட்டிற்கு ஏராளமான ஜலம் கிடைக்கும்.' அந்தப்படி அரசன் பாம்பு ஓடுவதைக்கண்டு வாய்க்கால் வெட்டிக் கொண்டு போக அது மறைந்த இடமாகிய குளித்தலை தாலூகாவிலுள்ள மாநூர் சமீபத்திலிருந்து இவ்வாய்க்காலுக்கு ஜலம் ஆரம்பமாகி ஓடிவந்தது. இது சுமார் பதினான்கு மைல் தூரம் திருக்கற்குடி வந்ததும் மலையால் தடுக்கப்பட்டு ஜலம் முழுமை யும் மறைந்து போயிற்று! பின்னர் அரசன் கவலைகொண்டு இம்மலைக்கோவில் சுவாமியை பிரார்த்தித்ததும் ஜலம் நெடுகப்போகலாயிற்றாம். இதற்கு 'ஸர்ப்பநதி' என்று பெயருண் டான சமன்னியில் இதற்கு வயது ஆயிரம் வருஷமென்றும் அது படிப்படியாக வாலினது கோடியிலிருந்து வால் வரைக்கும் மறைந்து போகுமென்றும், பிறகு உடல் வரைக்கும் ம றையுமென்றும், கடைசியாக தலைவரைக்கும் மறைந்து போகுமென்றும் அசரீரிவாக்கு அக் காலத்தில் ஏற்பட்டதாம்.

அதன்படியே இப்பொழுது தஞ்சாவூரிலிருந்து திருச்சிராப்பள்ளி வரையிலுள்ள இந்த வாய்க்கால் மறைந்து போயிற்றாம்!

சிலாசாஸன விஷயம்.

இவ்வூர்க்கோயிலிலுள்ள சில சிலாசாஸனங்களிலிருந்து இவ்வூர் சிலகாலம் நந்தி வர்மமங்கலம் எனப்பெயர் வழங்கி வந்திருந்தது. இப்படி நேரிட்டது பல்லவமன்னர்க ளில் ஒருவராகிய ஒன்பதாவது நூற்றாண்டிலிருந்த நந்திவர்மன் என்பவர் இவ்வூர்க்கோயி லுக்கும் பல தானங்கள் கொடுத்து அக்கிரகாரத்தையும் ஏற்படுத்தியிருந்ததிலிருந்தும் உண்டாயிருக்கலாம்.

முதலாவது ராஜராஜசோழனும் அவ்விதமே இக்கோயிலுக்கு ஏராளமான கொடை அளித்ததிலிருந்து இவ்வூருக்கு அவரது காலத்தில் ராஜாஸ்ரய சதுர்வேதி மங்கலம் என் றும் பெயர் வழங்கிவந்தது. இக்கோயில் கர்ப்பகிருஹம் தென்சுவரில் ராஜராஜதேவர் இவ்விடம் உத்ஸவாதிகளுக்கு தனமளித்த விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

முதல் பிராகாரம் கீழ்ச்சுவரிலுள்ள சாஸனத்திலிருந்து வீரராஜேந்திர சோழ மஹாராஜன் தாம் திருவானைக்காவலில் 'அபிமானராமன்' எனப்படும் தமது அரண்மனை

யிலிருந்த காலத்தில் இக்கோயில் உத்ஸவாதிகளுக்குத் தனமளித்த விவரம் எழுதப்பட்டிருக்கிறது. சந்நியாசிகளுக்கு மலை அடிவாரத்தில் சாப்பாடு செய்துவைக்க வேண்டித் தனம் ஏற்படுத்தினராம்.

உள் கோபுரம் வடக்கு கிழக்கு இவ்விரு சுவரிலுமுள்ள குலோத்துங்க சோழன் சிலாசாஸனம் ஒரு முக்கிய விஷயத்தைக் காட்டுகிறது. அக்காலத்தில் மிச்ர ஜாதியாகிய அநுலோமர், பிரதிலோமர் இவர்களில் அநுலோமர்களைச்சேர்ந்த ரதகாரரெனப்படுவர்களின் தொழில் முறைகளைக் குறிப்பிடுவதாவது:—சில்பம், ரதம் செய்தல், கோபுரநிர்மாணம், மண்டபம் கட்டுவித்தல் இவைகளை க்ஷத்திரிய தகப்பனுக்கும் வைசிய தாயாருக்கும் பிறந்த மாஹிஷ்யனுக்கும், வைசியதகப்பனுக்கும் சூத்திர தாயாருக்கும் உண்டான காணிஸ்தரிக்கும பிறக்கும் ரதகாரர்கள் நடத்தலாமென்னும் விவரம்.

தேவாரப்பாடல்கள்.

திருஞானஸம்பந்தசுவாமிகள் பாடியது:—

முதல் திருமுறை—பண்—தக்கராகம்.

வடந்திகழ்மென்முலையாளைப்பாகமதாகமதித்துத்
தடந்திரைசேர்புனல் மாதைத்தாழ்சடைவைத்தசதுரர்
இடந்திகழ்முப்புரிநூலர்துன்பமோடின்பமதெல்லாம்
கடந்தவர்காதலில்வாழுங்கற்குடிமாமலையாரே. 1

அங்கமோராறுடைவேள்வியானவருமறை நான்கும்
பங்கமில்பாடலோடாடல்பாணிபயின்றபடிறர்
சங்கமதார்குறமாதர்தங்கையில்மைந்தர்கடாவிக்
கந்துலின்மாமதிபற்றுங்கற்குடிமாமலையாரே. 2

நீரகலந்தருசென்னிநீடியமத்தமும்வைத்துத்
தாரகையின்னொளிசூழ்ந்ததண்மதிசூடியசைவர்
போரகலந்தருவேடர்புனத்திடையிட்டவிறகிற்
காரகிலின்புகைவிம்முங்கற்குடிமாமலையாரே. 3

ஒருங்களிநீயிறைவாவென்றும்பர்களோலமிடக்கண்
டிருங்களமாரவிடத்தையின்னமுதுண்ணியவீசர்
மருங்களியார்பிடிவாயில்வாழ்வெதிரின்முளைவாரிக்
கருங்களியானைகொடுக்குங்கற்குடிமாமலையாரே. 4

போர்மலிதிண்சிலைகொண்டுபூதகணம்புடைசூழப்
பார்மலிவேடுருவாகிப்பண்டொருவர்க்கருள்செய்தார்
ஏர்மலிகேழல்கிளைத்தவின்னொளியாமணியெங்கும்
கார்மலிவேடர்குவிக்குங்கற்குடிமாமலையாரே. 5

உலர்ந்தவரென்பதணிந்தேயூரிடுபிச்சையராகி
விலங்கல்வில்வெங்கனலாலேமூல்வயில்வேவமுனிந்தார்

நலந்தருசிந்தையராகிநாமலிமாலையினாலே
கலந்தவர்காதலில்வாழுங்கற்குடிமாமலையாரே 6

மானிடமார்தருகையர்மாமழுவாரும்வலத்தா
ஊனிடையார்தலையோட்டிலுண்கலனாகவுகந்தார்
தேனிடையார்தருசந்தின்றிண்சிறையாற்றினைவித்திக்
கானிடைவேடர்விளைக்குங்கற்குடிமாமலையாரே. 7

வாளமர்வீரநினைந்தவிராவணன்மாமலையின்கீழ்த்
தோளமர்வன்றலைகுன்றத்தொல்விரலூன்றுதுணைவர்
தாளமர்வேய்தலைப்பற்றித்தாழ்கரிவிட்டவிசைபோய்க்
காளமதார்முகில்கீறுங்கற்குடிமாமலையாரே. 8

தண்டமர்தாமரையானுந்தாவியிம்மண்ணையளந்து
கொண்டவனும்மறிவொண்ணாக்கொள்கையர்வெள்விடையூர்வர்
வண்டிசையாயினபாடநீடியவார்பொழினீழற்
கண்டமர்மாமயிலாடுங்கற்குடிமாமலையாரே. 9

மூத்துவராடையினாருமூசுகருப்பொடியாரும்
நாத்துவர்பொய்ம்மொழியார்கணயமிலராமதிவைத்தார்
ஏத்துயர்பத்தர்கள்சித்தரிறைஞ்சவவரிடரெல்லாங்
காத்தவர்காமருசோலைக்கற்குடிமாமலையாரே. 10

காமருவார்பொழில்சூழுங்கற்குடிமாமலையாரை
நாமருவண்புகழ்காழிநலந்திகழ்ஞானசம்பந்தன்
பாமருசெந்தமிழ்மாலைபத்திவைபாடவல்லார்கள்
பூமலிவானவரோடும்பொன்னுலகிற்பொலிவாரே. 11

அப்பர் சுவாமிகள் பாடியது:—

திருத்தாண்டகம்

மூத்தவனை வானவர்க்கு மூவாமேனி முதலவனைத்திருவரையின்மூக்கப்பாம்பொன்
றார்த்தவனையக்கரவ மாரமாக வணிந்தவனைப் பணிந்தடியாரடைந்தவன்போ
டேத்தவனை யிறவரையிற் றேனையேனோர்க் கின்னமுதமளித்தவனை யிடரையெல்லாம்
காத்தவனைக்கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக்கண்ணாரக் கண்டேனானே. 1

செய்யானை வெளியானைக் கரியான்றன்னைத் திசைமுகனைத் திசையெட்டுஞ் செறிந்தான்றன்னை
ஐயானை நொய்யானைச் சீரியானை யணியானைச் சேயானை யானஞ்சாடு
மெய்யானைப் பொய்யாது மிலாதான்றன்னை விடையானைச் சடையானை வெறித்தமான்கொன்
கையானைக் கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேனானே. 2

மண்ணதனி லைந்தைமா நீரினான்கை வயங்கெரியின் மூன்றைமா ருதத்திரண்டை
விண்ணதனி லொன்றை விரிகதிரைத் தண்மதியைத் தாரகைகடம்மின்மிக்க
எண்ணதனி லெழுத்தை யேழிசையைக் காமனெழிலழியவெரியுமிழ்ந்த விமையாநெற்றிக்
கண்ணவனைக் கற்குடியில்விழுமியானைக்கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. 3

நற்றவனைப் புற்றரவநாணினானை நாணாதுநகுதலையூ ணயந்தான்றன்னை
முற்றவனைமூவாத மேனியானை முந்நீரினஞ்சமுகந் துண்டான்றன்னைப்
பற்றவனைப் பற்றார்தம் பதிகள்செற்ற படையானை யடைவார்தம் பாவம்போக்கக்
கற்றவனைக் கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக் கண்ணாரக்கண்டேனானே. 4

சங்கைதனைத் தவிர்த்தாண்ட தலைவன்றன்னைச் சங்கரனைத் தழலுறு தாண் மழுவாடாங்கு
மங்கையனை யங்கமணி யாகத்தானை யாகத்தோர்பாகத்தே யமரவைத்த
மங்கையனை மதியொடுமா சுணமுந்தம்மின் மருவவிரி சடைமுடிமேல் வைத்தவானீர்க்
கங்கையனைக் கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக்கண்ணாரக் கண்டேனானே. 5

பெண்ணவனை யாணவனைப் பேடானானைப் பிறப்பிலியை யிறப்பிலியைப் பேரவாணி
விண்ணவனை விண்ணவர்க்கு மேலானானை வேதியனை வேதத்தின் கீதம் பாடும்
பண்ணவனைப் பண்ணில்வரு பயனானானைப் பாரவனைப் பாரில்வா ழுயிர்கட்கெல்லாம்
கண்ணவனைக் கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக்கண்ணாரக் கண்டேனானே. 6

பண்டானைப் பரந்தானைக் குவிந்தான்றன்னைப் பாரானை விண்ணாயிவ்வுலகமெல்லா
முண்டானை யுமிழ்ந்தானை யுடையான்றன்னை யொருவருந்தன் பெருமைதனை யறியவொண்ணா
விண்டானை விண்டார்தம் புரங்கண் மூன்றும் வெவ்வழலில் வெந்துபொடி யாகி வீழக்
கண்டானைக் கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக்கண்ணாரக் கண்டேனானே. 7

வானவனைவானவர்க்கு மேலானானை வணங்குமடியார் மனத்துண் மருவிப்புக்க
தேனவனைத் தேவர்தொழுங் கழலான்றன்னைச் செய்குணங்கள் பலவாகி நின்றவென்றிக்
கோனவனைக் கொல்லைவிடை யேற்றினானைக் குழன்முழவமியம்பக் கூத்தாடவல்ல
கானவனைக் கற்குடியில் விழுமியானை கற்பகத்தைக்கண்ணாரக் கண்டேனானே. 8

கொலையானை யுரிபோர்த்த கொள்கையானைக் கோளரியைக் கூரம்பாவரைமேற்கோத்த
சிலையானைச் செம்மைதரு பொருளான்றன்னைத் திரிபுரத்தோர்மூவர்க்குச் செம்மைசெய்த
தலையானைத் தத்துவங்க ளானான்றன்னைத் தையலோர் பங்கினனைத் தன்கையேந்து
கலையானைக் கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேனானே. 9

பொழிலானைப் பொழிலாரும் புன்கூரானைப் புறம்பயனை யறம்புரிந்த புகலூரானை
எழிலானை யிடைமருதி னிடங்கொண்டானை யீங்கோய் நீங்காதுறையு மிறைவன்றன்னை
அழலாடு மேனியனை யன்றுசென்று குன்றெடுத்த வரக்கன்றோ ணெரியவூன்றுங்
கழலானைக் கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேனானே. 10

சுந்தரமூர்த்திசுவாமிகள் பாடியது:—

ஏழாம் திருமுறை—பண்—நட்டராகம்.

விடையாருங்கொடியாய்வெறியார்மலர்க்கொன்றையினாய்
படையார்வெண்மழுவாய்பரமாயபரம்பரனே
கடியார்பூம்பொழில்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
அடிகேளெம்பெருமானடியேனையுமஞ்சலென்னே. 1

மறையோர்வானவருந்தொழுதேத்திவணங்கநின்ற
இறைவாவெம்பெருமானெனக்கின்னமுதாயவனே
கறையார்சோலைகள்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
அறவாவங்கணனேயடியேனையுமஞ்சலென்னே. 2

சிலையால்முப்புரங்கள்பொடியாகச்சிதைத்தவனே
மலைமேல்மாமருந்தேமடமாதிடங்கொண்டவனே
கலைசேர்கையினனே திருக்கற்குடிமன்னிநின்ற
அலைசேர்செஞ்சடையாயடியேனையுமஞ்சலென்னே. 3

செய்யார்மேனியனே திருநீலமிடற்றினனே
மையார்கண்ணிபங்காமதயானையுரித்தவனே
கையார்சூலத்தினாய்திருக்கற்குடிமன்னிநின்ற
ஐயாவெம்பெருமானடியேனையுமஞ்சலென்னே. 4

சந்தார்வெண்குழையாய்சரிகோவணவாடையனே
பந்தாரும்விரலாளொருபாகமமர்ந்தவனே
கந்தார்சோலைகள்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
எந்தாயெம்பெருமானடியேனையுமென்றுகொள்ளே. 5

அரையார்கீளொடுகோவணமுமரைக்கசைத்து
விரையார்கொன்றையுடன்விளங்கும்பிறைமேலுடையாய்
கரையாரும்வயல்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
அரையாவெம்பெருமானடியேனையுமஞ்சலென்னே. 6

பாரோர்விண்ணவரும்பரவிப்பணிந்தேத்தநின்ற
சீரார்மேனியனே திகழ்நீலமிடற்றினனே
காரார்பூம்பொழில்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
ஆராவின்னமுதேயடியேனையுமஞ்சலென்னே. 7

நிலனேநீர்வளிதீநெடுவானகமாகிநின்ற
புலனேபுண்டரிகத்தயன்மாலவன்போற்றிசெய்யும்
கனலேகற்பகமேதிருக்கற்குடிமன்னிநின்ற
அனல்சேர்கையினனேயடியேனையுமஞ்சலென்னே. 8

வருங்காலன்னுயிரைமடியத்திருமெல்விரலாற்
பெரும்பாலன்றனக்காய்ப்பிரிவித்தபெருந்தகையே
கரும்பாரும்வயல்சூழ்த்திருக்கற்குடிமன்னிநின்ற
விரும்பாவெம்பெருமானடியேனையும் வேண்டுதியே. 9

அலையார்தண்புனல்சூழ்ந்தழகாகிவிழவமருங்
கலையார்மாதவர்சேர்திருக்கற்குடிக்கற்பகத்தைச்
சிலையார்வாணுதலாள்நல்லசிங்கடியப்பனுரை
விலையார்மாலைவல்லார்வியன்மூவுலகாள்பவரே. 10

பெருமாளையும், சிதம்பரம் கோவிலின் காட்சியையும் கனகஸபையையும், கூடகோபுர மண்டபங்களையும், தில்லை கோவிந்தராஜர் ஸந்நிதியையும் இரண்டாவது வெளியீட்டில் அதிரமணீயமான கலர் படங்களில் சித்தரித்திருப்பதைக் காணலாம்.

தமிழ்நேசன், கோலாலாம்பூர்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீவாணீ விலாச அச்சுக்கூடச் சங்கத்தார் வெளியிட்டுவரும் "தென் இந்தியா க்ஷேத்திரங்கள்" என்ற தொகுதியில் இரண்டாவதான சிதம்பரம் என்ற பகுதி வரப்பெற்றோம். இதில் ஸ்ரீமான் பி. வி. ஜகதீச ஐயர் சிதம்பரத்தைப் பற்றி எழுதியுள்ள பல அரிய விஷயங்கள் வெளியாயிருக்கின்றன. தில்லைச் சிதம்பரத்தைப் பற்றி நால்வர் பாடிய மேலான பாடல்களும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நடராஜர், நந்தன், மாணிக்கவாசகர், பதஞ்சலி வியாக்ரபாதர் படங்களும், கோயிலின் படங்களும உள்பட சுமார் நாற்பது படங்களும் இதில் சேர்க்கபட்டிருக்கின்றன.

தில்லை திருச்சித்திரகூடம் என்று திருமாலடியார் போற்றும் தில்லைக்கோவிந்தராஜ பெருமாள் கோயில் விவரமும், ஆழ்வார்கள் அருளிச்செய்த பாடல்களும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

மிகச்சிறந்த ஆர்ட்காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. விலை ஒரு ரூபாய். தமிழ் மக்கள் இதனை ஆதரிக்கவேண்டும்.

திருவானைக்கா, திருச்சிராப்பள்ளி முதலியன அடங்கிய மூன்றாம் பகுதி விரைவில் வெளிவருமென்று அறிகிறோம்.

லோகோபகாரி.

SOME OPINIONS.

The second part of this well-known series, which is to hand, deals with the sacred Saiva shrine at Chidambaram. The book deals fully with the philosophic and puranic versions about the place and gives clear and informing notes about all the important Deities, Rishis and other great men having anything to do with the sacred place. All the songs which the Tamil Saints have sung about Chidambaram are also given at the end and should prove of great use to devotees and scholars. The value of the book is further enhanced by the abundant number of beautiful illustrations which are a feature of many of the books issued from the Sri Vani Vilas Press.

The Hindu.

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்,

ஸ்ரீரங்கம்.

AVM. Murugan Thurai